தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

துணர் ௩௬

சார்வரி

1960 — 61

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

உள்ளுறை.

சார்வரி 1960—61	துணர் ௩௬	மலர் ௧-௧௨ பக்கம்.

1.	கரந்தைத் தமிழ்ச் சங்கச் செய்திகள் பொழிற்றொண்டர்	1, 65, 97
2.	செவியுணரா ஒலிகள் 2. திரு. ச. சம்பத் எம். ஏ.	5—73
3.	உமாமகேசுவர உ. ப. மாணவர் மன்ற விழா தலைமையுரை — அண்ணலார் பு. அ. சுப்பிரமணியனார்	9
4.	யாங்ஙனம்? அயிலன்.	13
5.	தஞ்சாவூர்—புறம்படி—கருந்திட்டைக்குடி வித்துவான், சி. கோவிந்தராசனார்	17
6.	நிகழ்ச்சிக் குறிப்பு	22
7.	இன்சொலும்—வன்சொலும் வித்துவான், கு. சின்னையன்	23
8.	தமிழினம் வாழ — அழ. சிதம்பரம், எம். ஏ.	27
9.	மதிப்புரை	30
10.	திருவாசகத்தேன் திரு. சோ. ந. கந்தசாமி, பி. ஏ. ஆனர்சு.	31, 87
11.	கண்கொடுத்தவனிதம் வித்துவான், சி. கோவிந்தராசனார்	33, 57
12.	வயமான் — வித்துவான், கா. சண்முகம்	39
13.	தமிழ் வாழ்வு — புத்தூரான்	46
14.	இலக்கியமும், வாழ்வும் — அமீது, எம். ஏ.,	49
15.	விளக்கவுரைக்கோர் வேண்டுகோள் சோம. சிவப்பிரகாசம்	51, 89
16.	வள்ளுவர் சொல்லறம் — தமிழன்பன்	52
17.	க. த. ச. 49-ஆம் ஆண்டு நிறைவு விழா	65, 97
18.	பதினெண்கீழ்க்கணக்கு வித்துவான், எஸ். நடராசன்	76
19.	இஞ்சியில் எஞ்சிய சிற்பங்கள் வித்துவான், சி. கோவிந்தராசனார்	81
20.	தமிழிசைப் பாடல் — ச. பா. — இசை. ப. சு.	93
21.	பருத்தியூர் கல்வெட்டுகள் வித்துவான், சி. கோவிந்தராசனார்	99
22.	சிறு பொழுது — த. இராமநாத பிள்ளை, பி. ஏ.,	101
23.	சேரலாதன் அளித்த பெருஞ்சோறு மயிலை, சீனி. வேங்கடசாமி	105
24.	வள்ளுவர் வகுத்த இன்பம் வித்துவான், வி. சச்சிதானந்தம்	112

25. குறமும், குறவஞ்சியும்
மது. ச. விமலானந்தம், எம். ஏ., 117, 157, 183
26. தமிழ் மானம் — அறிவொளி 126
27. தமிழின்பம் — புலவர், ந. இராமநாதன் 127
28. பாணி — குடந்தை, ப. சுந்தரேசன் 129
29. புதுமைக்கு
வித்துவான், சோ. சிங்காரவேலனுர் பி. ஏ. 139
30. கவிதையில் எளிமை — சாலை, இளந்திரையன் 143
31. மறுபிறப்பு — த. இராமநாத பிள்ளை, பி. ஏ., 146
32. வானெலி நாடகம்
கோ. சண்முகசுந்தரம், எம். ஏ., எம். எசி., 148
33. பிரிட்டனில் தமிழ்
பேராசிரியர், அ. கிருட்டினமூர்த்தி, எம். ஏ., பி. எல்., 161
34. சிலப்பதிகாரமும் வெள்ளிக்கிழமையும்
K. S. மகாதேவன் எம். ஏ., பி. எசி., 166
35. கைக்கிளைப்பண் — குடந்தை, ப. சுந்தரேசன் 170
36. தமிழில் கனவு
வித்துவான், சோ. சிங்காரவேலனுர், பி. ஏ., 176
37. வேண்டிய கல்வி யாண்டுமூன்றிறவாது
த. இராமநாத பிள்ளை பி. ஏ., 181
38. திருக்கோவையாரும் கல்லாடமும்
பண்டித - வித்துவான், தி. சங்குப் புலவர் 188, 224
39. சேரலாதன் பெருஞ்சோறுவழங்கியது பாரதப்
படைக்கே I. II — ஞா. தேவநேயன் 193, 321
40. முப்பாலும் நான்மறையும்
த. இராமநாத பிள்ளை பி. ஏ., 201
41. இராசராசேசுவரம் — உள்ளூர்ப் பண்டாரம்
வித்துவான், சி. கோவிந்தராசனுர் 205
42. தனித்தமிழ் — ஒரு விளக்கம்
சாலை — இளந்திரையன் 212
43. அழுதாள் — குயில் விருத்தம்
வித்துவான், சோ. சிங்காரவேலனுர் பி. ஏ., 215
44. 'மெய்' என்னும் சொல்லாராய்ச்சி
மயிலை, சீனி வேங்கடசாமி 217
45. 'பள்ளு'
மது. ச. விமலானந்தம், எம், ஏ., 220, 282, 319, 378
46. வேண்டுகோள் — பொழிற்றெண்டர் 225
47. திருக்குறட்பாயிரம்
திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் பி. ஏ., எல். டி., 227
48. புறநானூறும் அதன் இலக்கணமும்
புலவர், திரு. வை. மு. இராமகிருட்டினன் 234

49. அறவண அடிகள்
வித்துவான், சோ. சிங்காரவேலனுர் பி. ஏ., 239
50. யோகாசனம் — த. இராமநாத பிள்ளை பி. ஏ., 248
51. வெறுக்க முடியாத அடிமைத்தளை
தி. நா. அறிவொளி 248
52. சிலம்புகழி நோன்பும் சிலம்புகழீஇ யயர்தலும்
குடந்தைச் சோழன் 251. 301, 350, 382
53. க. த. ச. பொன் விழா (வேண்டுகோள்)
54. நடை — பேராசிரியர், ப. முருகன் எம். ஏ., 258
55. சேரலாதன் அளித்த பெருஞ்சோறு
மயிலை, சீனி வேங்கடசாமி 268
56. நற்றிணையில் ஒப்பனைக்கலை
வித்துவான், சோ. சிங்காரவேலனுர் பி. ஏ., 276
57. க. பு. க, கட்டிட நிதி நன்கொடையாளர்கள் 287
58. உருண்டவட்டும் துரந்தகுணிலும்
K. S. மகாதேவன் எம். ஏ., பி. எசி., 289
59. தொடுமணற்கேணி — வித்துவான், ந. செகதீசன் 295
60. தக்கார் தகவிலர் ………… படும்
திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் பி. ஏ., எல். டி., 297
61. பழந்தமிழர் கல்வி வரலாறு
திரு. கு. சிவமணி எம். ஏ., பி. டி., 305, 330
62. மாமதில் தஞ்சை
வித்துவான், சி. கோவிந்தராசனுர் 311
63. தமிழுக்காக — சாலை, இளந்திரையன் 316
64. வாழ்க்கை வரலாறு — தன் வரலாறு
திரு. கோ. சண்முகசுந்தரம் எம். ஏ., எம். எசி., 336, 374
65. தஞ்சை, குறிச்சித்தெரு ……… பட்டயம்
வித்துவான், சி. கோவிந்தராசனுர் 340
66. எச்சம் — வித்துவான், வை. தட்சணமூர்த்தி 344
67. சாமி-சிதம்பரனுர் — மறைவு 348
68. அயோத்தியரசு
அ. பாண்டுரங்கன், எம். ஏ., 353
69. தமிழின் மறுமலர்ச்சி
சாலை, இளந்திரையன் எம். ஏ., எம். லிட்., 361
70. உற்றலால் கயவர் தேருர்
திரு. ப. முருகன், எம். ஏ., 366
71. யோகாசனம் — புலவர், இரா. முத்துக்குமாரசாமி 370

தமிழ் வாழ்க!



தண்டமிழ்ப் பண்பே எண்டிசை பரவத்
தொண்டுசெய் தருளால் துலங்கிக் கரந்தைத்
தமிழ்ப்பெருஞ் சங்கஞ் சால்புறப் போற்றி
கண்ணெனக் கல்வியைத் தண்ணென வளர்த்த
செந்தமிழ்ப் புரவலர் திகழுந் தமிழவேள்

திரு. த. வே. உமாமகேசுவரனுர், பி. ஏ., பி. எல்.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௧	மலர்
	சார்வரி, சித்திரை	
௩௪	1960 ஏப்பரல், மே.	௧

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றி நாற்பத்தொன்பதாண்டுகளா கின்றன. கடந்த நாற்பத்தொன்பதாண்டுகளாக இச் சங்கம் தொடர்ந் தாற்றிவரும் பணிகள் பலவாகும்.

நம் சங்கம் தமிழ் நலம் பேணவும், தமிழர் நலம் பெருக்கவும் எண்ணித் தோற்றமுற்றதாம். தமிழ் மொழியின் தொன்மை, எளிமை, இனிமை ஆய பண்புகள் நம் மக்களாலும் நன்குணரப்படாத நிலை அப்போதிருந்தது. தமிழ்மொழி கொண்டு இலக்கியம் படைக்கவோ, உரைநடை வரையவோ முடியுமெனத் தமிழர்களே எண்ணாத காலம். சுருங்கக்கூறின் தமிழ்மொழி மட்டுங் கொண்டு எதனையும் செய்ய வியலாதென அறிஞர்களிற் பலர் நம்பிக்கையிழந்த சூழ்நிலை அக்காலத்திலிருந்தது. தமிழ்ச் சொற்கள் இலக்கிய அரங்கு, அரசியல் மேடையாய விடங்களில் கையாளப்படவில்லை. தமிழர்கள் தன்னம் பிக்கையின்றித் துறைதொறும் வாழ்ந்தனர். மொழியைப் பற்றிய அவல வாழ்வு மொழி பேசும் மக்கள்பாலும் விளங்கிற்று. இந்நிலையில் தமிழராயினோர் விழித்தெழத் தமிழ் மொழியன்றி வேறு வழியில்லை. தமிழ் மக்களும் மதத்தாலும், அரசியற் கட்சிகளாலும் பலவாருகப் பிரிவுற்று வாழ்ந்தனர். அவர்கள்பால் ஒற்றுமையுண்டாக்கி அவர்கள் வாழ்வில் புத்தொளியூட்டும் கருவியாக விளங்க வல்லது அன்னைமொழி யாம் தமிழ் என்பதில் ஐயமில்லை.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை நன்கெண்ணிய திரு வே. இராதா கிருட்டினப் பிள்ளையவர்களும் பிறசில நண்பர்களும் இச்சங்கத்தை மே-14—1911ல் நிறுவினர். எண்ணுதலும் சொல்லுதலும் எல்லோ ருக்கும் எளிது; எண்ணிய வண்ணமும் சொல்லிய வண்ணமும் செயலாற்றுதல் அருமையுடைத்து. எவ்வகையான இடுக்கண் நேரினும் சங்கத்தை உருப்பெறச் செய்யவேண்டுமென்னும் திண்ணிய வுள்ளங்கொண்ட தமிழன்பர்களால் சங்கம் உருப்பெற்று வளர்வ

தாயிற்று. இந்நிலையில் சங்கந்தோன்றுதற்கு முதலாக நின்ற திரு. வே. இராதாகிருட்டினப் பிள்ளையவர்கள் திடுமென இயற்கை யெய்தினர். இவருக்கு உடன்பிறந்தோரான கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதற்றலைவர், செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் சங்கத்தின் பொறுப்பை ஏற்கலாயினர். அவர்கள் தம் தம்பியின் உள்ளம் தவழ்ந்தூரும் இளங்குழவிபோலக் குழந்தைப் பருவத்திலிருந்த கரந்தைத் தமிழ்ச் சங்க வளர்ச்சியில் மொய்த்துக்கிடந்தமையை நன்கறிந்தனர். சங்கந் தவிர்த்த பிற எவையும் அத்துணைச் சிறந்ததாகத் தமிழவேளவர்களின் உள்ளத்திற் படவில்லை. இவ்வாறு சங்கம் தக்க சான்றோரொருவரின் இடையறாத் தொண்டால் வளரத்தொடங்கிற்று. சில ஆண்டு களிலேயே அதன் பெயர் கூறிய அளவிலேயே சங்கத்தின் கொள்கை களையும், குறிக்கோள்களையும் சேர்த்தெண்ணும் நாடறியும் நிலையமாக சங்கம் விளங்கலாயிற்று.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த பெரும்புலவர்க ளெல்லோரும் சங்கத்தொடு தொடர்பு கொண்டனர். புலவர்களின் கூட்டுறவைப் பெரிதும் மதித்துப் போற்றிய நம் தமிழவேளவர்களைச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியனே என்று புலவர்களும் வாழ்த்தினர்.

திரு. மறைமலையடிகள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள், திரு. விபுலானந்த அடிகள், திரு. கா. நமச்சிவாய முதலியார், கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. ச. சோமசுந்தர பாரதியார், திரு. ரா. இராகவையங்கார், திரு. உ. வே. சாமிநாதையர், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. அ. வரத நஞ்சைய பிள்ளை போன்ற பெரும் புலவர்கள் நம் சங்க விழாக்களில் பங்குகொண்டு உரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். அரித்துவார மங்கலம், இராசகோபால இரகுநாதராசாளியார், கூடலூர் வே. இராமசாமி வன்னியர், திரு. A. T. பன்னீர்செல்வம், மன்னர் இராசராசேசுவர சேதுபதி, பூண்டி பெருநிலக்கிழார் வீ. அப்பாசாமி வாண்டையார் போன்ற பெரும் புரவலர்கள் சங்கப் பணிக்குப் பொருளும் உரையும் வழங்கிச் சிறப்பித்தனர். மேற்குறிப்பிட்ட புலவர் பெருமக்களுடைய ஒத்துழைப்பாலும், புரவலர்களின் நன்கொடையாலும் நம் சங்கம் சிறந்து வளர்ந்தது.

சங்கத்துக்கெனத் 'தமிழ்ப் பொழில்' என்னும் பெயரிய திங்களிதழொன்றும், நூல் நிலையமொன்றும், தொடக்கப்பள்ளி யொன்றும், ஏழை மாணவரில்லமொன்றும் தோற்றம் பெற்றன. நூல் நிலையத்திற்குத் தமிழன்பர் பலரும், சிறப்பாக, வள்ளல் பெத்தாச்சிச் செட்டியாரவர்களும் சிறந்த பல நூல்களை வழங்கினர்.

1916-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற தொடக்கப்பள்ளி உயர்தரத் தொடக்கப் பள்ளியாக முதிர்ந்தும் அதனின்று நடுநிலைப்பள்ளி கிளைத்தும் இரு கல்வி நிலையங்களாக விளங்கலாயின. நம் சங்கத் திங்களிதழான 'தமிழ்ப் பொழிலும்' முப்பத்தைந்து யாண்டுகளாகத் தமிழ் மொழித் தொடர்பான அறிஞர்களின் ஆய்வுரைகளைத் தன்பாற் கொண்டு நாட்டவர் நன்கறியத் தொண்டு செய்து வருகின்றது. சங்கம் நடத்தி வரும் ஏழை மாணவரில்லமும் ஆண்டுதோறும் பல மாணவர்கட்குக் கல்வியோடு உண்டியும் உறையுளுமுடனீந்து உதவி வருகின்றது. இவையன்றித் தமிழ் வளர்ச்சி பற்றிய தொண்டுகளில் அறிஞர்களைக் கூட்டிச் சொற்பொழிவாற்றச்செய்து பல்லாயிர மக்கள் தமிழ் நலமறிந்து அதன்பால் ஈடுபாடுகொள்ளச் செய்து வந்துள்ளது.

தமிழ்நலங் கருதித் தொடர்ந்து தொண்டு செய்து வந்த நம் சங்கம் 1938-ல் வெள்ளி விழாக் கொண்டாடியது. இவ்விழாவின் நினைவாகத் தோற்றம் பெற்ற இரு படைப்புக்கள் குறிப்பிடத்தக்கன. ஒன்று, புலவர் கல்லூரி; இரண்டு, 'கரந்தைக் கட்டுரை' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல். வெள்ளி விழாவின் இரண்டாம் நாளில் தோற்றம் பெற்ற நம் புலவர் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் இணைப்பிசைவினை 1941-ஆம் யாண்டில் பெற்று வளர்ந்து வருகின்றது. ஆனால் இசைவினைப்பெற ஆவனவெல்லாம் செய்து முடித்த சங்கத் தலைவர், தமிழவேளவர்கள் இதனைக் காண முடியவில்லை. வடநாட்டில் திகழும் விசுவ பாரதி போன்ற நிறுவனங்கள் செயற்படும் முறைமையினை நேரிற் கண்டறிந்து வந்து சங்கத்தினை ஆக்கம் பெறச் செய்யலாமென்று வடநாடு நோக்கிச் சென்றனர். சென்ற தலைவர் வடநாட்டிலேயே இயற்கை எய்தும் இன்னாத நிலை ஏற்பட்டது. கடந்த பதினைந்து யாண்டுகளில் நூற்றுக் கணக்கான தமிழ்ப் புலவர்களைத் தமிழ் நாட்டிற்குப் புலவர் கல்லூரி அளித்துள்ளது. வெள்ளி விழாக்கட்டுரைத் தொகுதிகள் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரும் புலவர், தமிழ்நாட்டிடத்தும், தமிழ் மொழியிடத்தும் குன்றாப் பற்றுக்கொண்ட பிற துறைப் பெரும் பேராசிரியர்கள் ஆகியோரின் செவ்விய கருத்துக்களின் கருவூலமாக விளங்கித் தமிழ் மக்கட்கு நல்லறிவை நல்கியுள்ளது.

அடுத்துக் காலஞ்சென்ற தமிழ்ப் பேரன்பர்களான திரு. ஐ. குமாரசாமிப் பிள்ளையவர்கள் முத்தமிழ் வள்ளல், ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்கள் தலைமையில் சங்கம் தன் தமிழ்த் தொண்டினை ஆற்றிவந்தது.

அயலவர் ஆளுகைக்குட்பட்டிருந்த நம் நாடு விடுதலை பெற்றுப் பல துறைகளிலும் வளர்ச்சிபெற வாய்ப்பேற்பட்டது. சங்கம் நெடுங்காலமாக எண்ணிய எண்ணங்கள் உருப்பெறத் தொடங்கின.

மொழித்துறையிலும் நம் நாடு நன்முறையில் முன்னேறியுள்ளது. நம்மருந்தமிழை ஆட்சி மொழியாக ஆக்கி மகிழும் வாய்ப்பினைப் பெற்றுள்ளோம். அயன்மொழி வாயிலாகவே நம் மக்கள் கல்வி பெற்றுவந்த காலம் போய்ப் பல்கலைக்கழகப் படிப்பு வரையிலும் தமிழ் மொழி வாயிலாகப் படிக்கும் நல் வாய்ப்பையும் நம் நாடு பெறவிருக்கின்றது. பல துறைகளிலும் பின் தள்ளப்பட்டிருந்த நம் மொழியும் நாடும் முழு அளவிற்கு முன்னேறிவிட்டதென்று கூறமுடியாது. ஆயினும் முன்னேறுதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் மிகுதியாக வுள்ளன. அவ்வளவில் நாம் பெருமையுற வேண்டியவர்களாக வுள்ளோம்.

1949–1953 ஆய நான்கு ஆண்டுகள் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் திருவார்திரு. அம்பலவாண பண்டாரசந்நிதி யவர்களின் அருள்நோக்கால் நன்முறையில் சங்கக் கல்வி நிலையங்கள் நிகழ்வ வாயின. நடுநிலைப் பள்ளியாகவிருந்தது உயர் நிலைப் பள்ளியாயிற்று. இதனல் கரந்தையிலும், அதைச் சூழ்ந்துள்ள சுற்றுப்புற ஊர்களிலும் வாழும் ஆண்களும், பெண்களுமாய இருபாலர்களும் கல்வி பெறுதற்குப் பெருவாய்ப்பாயிற்று. திருவாவடுதுறை யாதீனத் தலைவர் காலஞ் சென்றனர். அவர்கள் மேற்கொண்ட சங்கக் கல்வி நிலையங்களும் மீண்டும் சங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பெற்றன. இந்நிலையில் சங்கக் கல்வி நிலையங்களையும், சங்கத்தையும் பேணிப்புரக்கும் பொறுப்பு மீண்டும் சங்கத்தாரையே சார்வதாயிற்று. இப்போதுள்ள சங்கத்தின் ஆட்சியினர் அவைகளைத் தக்க முறையில் பேணிப்புரந்து வருகின்றனர்.

அருணசல நிலையப் படப்பிடிப்பாளரும் பட வெளியீட்டாளருமாகிய திரு. அ. கு. வேலனவர்களின் பெருங் கொடையின் துணை கொண்டு தொடக்கப் பள்ளிக்கு ஒரு கட்டிடம் கட்டப்பெற்றது. செய்கோனில் வாழும் தமிழன்பர்களின் நன்கொடையினைத் திரட்டித் திரு. சிவ. சுப்பிரமணிய பிள்ளையவர்களும், காலஞ்சென்ற அப்துல் அசீசு அவர்களும் அளித்த உதவிகொண்டும், அரசியலார் உதவி கொண்டும் உயர் நிலைப் பள்ளிக்கு ஒரு பெருங்கட்டிடம் கட்டப் பெற்றது. வாணிகப் பெருமக்கள் தங்கள் நன்கொடையால் புலவர் கல்லூரிக்கு ஒரு பெருங் கட்டிடமும் கட்டி முடியும் நிலையிலிருக்கின்றது.

சங்கத்தின் ஐம்பதாவது யாண்டின் நிறைவாகப் பொன்விழா அடுத்த யாண்டில் சிறப்புற நிகழவிருக்கிறது. இவ்விழா பல்லாற்ருனும் சிறப்புற நிகழத் தமிழன்பர்கள் தம்முடைய மேலான ஒத்துழைப்பையும் பேராதரவையும் சங்கத்திற்களிப்பார்களென நம்புகின்ருேம்.

பொழிற்ருெண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

செவியுணரா ஒலிகள்-2.

ச. சம்பத்து, எம். ஏ.,
அரசர் சரபோசிக் கல்லூரி, தஞ்சாவூர்.

வௌவால்கள் 'மேற்புற ஒலிகளை' (Ultrasonics) எழுப்பி அவற்றின் எதிரொலிகளைக் கேட்டுப் பொருள்களை அறிந்து கொள்கின்றன என்று கண்டோம். இனி அவை ஏன் மேற்புற ஒலிகளையே பயன்படுத்துகின்றன; ஏன் சாதாரண மனிதருணரும் ஒலிகளைப் பயன் படுத்தலாகாதென்பதனை ஆராய்வோம்.

இருள் சூழ்ந்த இரவில், ஒற்றைச் சாளரமுடைய ஒரு அறையின் வெளியே நாம் நின்று கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது உள்ளே ஒரு விளக்கினை ஏற்றினால், அதன் ஒளி திறந்திருக்கும் சாளரத்தின் வழியே ஒளிக்கற்றைகளாக வெளியே பாய்ந்து அதன் வழியிலுள்ள பொருள்களை ஒளிரச் செய்வதனைக் காணலாம். நாம் அந்த ஒளியில் சுவடியொன்றைப் படிக்க விரும்பினால் அவ்வொளி படுமிடத்திற் சென்று (-சாளரத்தின் நேரே-) நின்றால் தான் படிக்க இயலும்: அவ்விடத்தை விட்டுச் சற்று விலகினாலும் ஒளி அச்சுவடியின் மீது படாது; படிக்க இயலாது. ஆனால் அதே நேரத்தில் அறையினுள்ளே ஒருவர் குழலை ஊதிக்கொண்டிருந்தால் அதன் இன்னிசை சாளரத்தின் வழியே தந்து அறையின் வெளிப்புறமெங்கும் பரவுதலை அறியலாம். ஒலியைக் கேட்க சாளரத்திற்கு நேரேதான் நிற்க வேண்டுமென்பதில்லை; விலகி நின்றாலும் கேட்கும்.

மகிழ்வும் வாழ்த்தும்.

தமிழ்ப் பேரன்பரும், சிறந்த பொதுநலத் தொண்டரும், நம் சங்கத்தின் வினைக்குழு உறுப்பினருள் ஒருவரும், திருச்சித் தமிழ்ச் சங்கத் தலைவரும், திருச்சி, மயிலஞ் சந்தைப் பெரு வாணிகருமான திரு. தெ. துரைராசப் பிள்ளையவர்கள் மீண்டும் சென்னை மாநில மேல் மன்ற உறுப்பினராகத் தேர்வுபெற்றமை குறித்துப் பெரிதும் மகிழ்கின்றோம். திரு. பிள்ளையவர்கள் தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் பலவகையான சிறந்த தொண்டுகளாற்றி எல்லா நலன்களுடனும் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பொழிற்றொண்டர்.

விலகி நின்ருலும் கேட்பதால் ஒலி சுவரின் வழியாகப் புகுந்து வந்திருக்கலாமே என எண்ண வேண்டுவதில்லை. அது திறந்திருக்கும் சாளரத்தின் வழியேதான் வருகின்றது. இதிலிருந்து ஒளி தோன்று மிடத்திலிருந்து குறித்த திசைப் போக்கிலேயே செல்கின்றது என்றும், ஒலி எல்லாத் திசைகளிலும் பரவுகின்றது என்றும் அறிகின்ருேம். ஒலி, ஒளி இரண்டுமே அலைகள் வாயிலாகவே பரவி னுலும் இவ்வகையில் வேறுபடுகின்றன. இந்த மாறுபாட்டிற்குக் காரணம் அவைகளின் அலை நீளத்திலுள்ள வேறுபாடே. ஒலி அல்லது ஒளி அலைகள் தோன்றுகின்ற இடத்தின், அல்லது அவற்றின் வழியிலுள்ள ஒரு தடையிலுள்ள ஒரு துளையில் (ஒலி அல்லது ஒளி அலைகள் அறையினுள்ளே தோன்றினுல் அவற்றின் வழியிலேயுள்ள சுவர் ஒரு தடை, சுவற்றிலுள்ள திறந்த சாளரம் ஒரு துளை) புகுந்து வந்தால் அந்தத் துளையின், 'அளவை' (Dimension) அந்த அலைகளின் அலை நீளத்தைவிடக்குறைவா கவோ அல்லது ஏறத்தாழ ஒரே அளவாகவோ இருந்தால் அலைகள் எல்லாத் திசைகளிலும் பரவும். மாருக, புறப்படுமிடத்தின் அளவை அலை நீளத்தைப் போல் பன்மடங்குப் பெரிதாக இருக்குமானுல் அந்த அலைகள் குறிப்பிட்ட திசைப் போக்கிலேயே செல்லும்; எல்லாத் திசைகளிலும் பரவாது. நாம் கண்ணுல் காண்கின்ற நீண்ட அலைகளையுடைய சிவப்பு ஒளிக்கதிர்களின் அலை நீளம் ஏறத்தாழ $\frac{1}{30,000}$ அங்குலமே இருக்கும். இதனைச் சாளரத்தின் அளவையோடு ஒப்புநோக்க அச்சாளரத்தின் அளவை பன்மடங்கு பெரிது. எனவே தான் ஒளி எல்லாத்திசைகளிலும் பரவாமல், குறித்த திசைப் போக் கிலேயே செல்கின்றது. ஆனுல் குழலிலிருந்து எழும் ஒலியின் அலை நீளம் சில அடிகள் இருக்கும். இது சாளரத்தின் பரிமாணத்தைவிட அதிகமாகவோ அல்லது ஏறத்தாழ ஒன்ருகவோ இருப்பதால் ஒலி அலைகள் எல்லாத் திசைகளிலும் பரவுகின்றன.

ஆகையால், வௌவால்கள் எழுப்பும் ஒலி மனிதருணரும் ஒலிகளாயிருந்தால் அவை எல்லாத் திசைகளிலும் பரவும். அதனுல் அவை எதிரிலுள்ள பொருள்களில் மட்டுமல்லாது மற்றத் திசைகளி லுள்ள பொருள்களிலும் பட்டு எதிரொலிக்கலாம். ஆதலால் வருகின்ற எதிரொலியிலிருந்து பொருள்களின் இருப்பிடத்தை அறிதல் இயலாது போய்விடும். ஆனுல் மேற்புற ஒலிகளை அனுப்பி னுல் இந்தத் தொல்லையில்லை. ஏனெனில், மேற்புற ஒலிகள் அதிக அலைவு எண் உடையன. அதனுல் அவற்றின் அலைநீளம் மிக மிகக் குறைவு. வௌவால்கள் எழுப்பும் 'மேற்புற ஒலிகளின்' அலைநீளம் அவற்றை எழுப்பும் அங்காந்த வாயின் பரிமாணத்தைவிட மிகக் குறைவு. எனவே ஒலிகள் குறித்த திசைப்போக்கிலேயே சென்று எதிரிலுள்ள பொருள்களில் மட்டும் பட்டுத் திரும்பிவரும்.

மேலும், ஒலி அலைகள் ஒரு பொருளின்மீது பட்டால் அந்தப் பொருளின் 'அளவை' அந்த அலைகளின் அலை நீளத்தைவிடக் குறைவாகவோ அல்லது ஏறத்தாழ ஒன்ருகவோ இருந்தால், ஒலி அலைகள் பொருளின் விளிம்பு ஓரமாகப் பக்கங்களில் வளைந்து சென்று விடும். அதனல் ஒலி பிரதிபலிக்காது; எதிரொலியுண்டாகாது. மாருக 'அலை நீளம்' குறைவாக இருந்தால் ஒலி பிரதிபலித்து எதிரொலி உண்டாகும். எனவே அலைநீளம் குறைந்த 'மேற்புற ஒலிகள்' சிறு பொருள்களிலும் பட்டு எதிரொலிக்கும். எனவே வௌவால்கள் 'மேற்புற ஒலிகளை'ப் பயன்படுத்துவதால் மிகச் சிறு பொருள்களையும் மயிரிழையைவிட சற்றே தடிப்பான மெல்லிய சிறு கம்பிகளையும் கூட அறிந்துகொள்ள இயலுகிறது.

இவ்வாறு, வௌவால்கள் 'மேற்புற ஒலிகளை' எழுப்பி அவற்றின் எதிரொலியினல் வியத்தகு முறையிலே பொருள்களை அறியும் திறனையும், நாட்டில் விழியற்ருேர் படுந் துயரையும் ஒருங்கே கண்ட விஞ்ஞானிகள், ஒளியிழந்தோர் ஒலியின் உதவியால் வழியறிய வகை செய்ய விழைந்து ஒரு கருவி செய்தார்கள். அது முதலில் சில 'மேற்புற ஒலிச் சைகைகளை' அனுப்பும். உடனே, அவை எதிரொலித்துத் திரும்பி வருவதைப் பெறுவதற்குத் தயாராகத் தாளுக மாறி விடும். எதிரொலித்து வரும் ஒலி அதனல் பெறப்பட்டு, அக்கருவியிலேயேயுள்ள ஒரு தனி அமைப்பினல் மனிதருணரும் ஒலிகளாக மாற்றப்படுகின்றது. அதிலிருந்து எதிரிலுள்ள பொருள்களையும் அவையுள்ள தொலைவையும் அறிந்துகொள்ளலாம். ஒரு எதிரொலி திரும்பி வந்தவுடன், அக்கருவி மீண்டும் ஒலிச்சைகைகளை அனுப்பும். இவ்வாறு ஒலிச்சைகைகளைத் தொடர்ந்து அனுப்பி அவற்றின் எதிரொலியிலிருந்து பொருள்களை அறிந்துகொள்ளலாம். இந்தக் கருவியினைக் குருடர்கள் பொருத்திக்கொண்டால் ஆள் துணையின்றி வழியறிந்து செல்லலாம். மிகவும் சிறு பொருள்களையுங்கூட அறிந்துகொள்ள வழிசெய்யுமிக் கருவியைக் 'குருடரின் விழி' யெனக் கூறின் மிகையாகாது. இதனைப் போக்குவரத்து அதிகமில்லாத, அமைதியின் உறைவிடமான கிராமப்புறங்களில் பயன்படுத்தல் எளிது. போக்குவரவுமிக்க, ஆரவாரம் நிறைந்த நகர்ப்புறங்களில் இதனைப் பயன்படுத்தல் அத்துணை எளிதன்று.

''அலிபாபாவும் ஆயிரம் திருடர்களும்'' கதையில், ஒரு கள்வர் கூட்டத்தின் குகை வாயிலில், ஒரு குழூஉக்குறிச் சொல்லைச் சொல்லத் தாளுகத் திறக்கும் வியப்பியல்பிற்று என்று படித்திருக்கின்ருேம். ஆனல், அந்த விந்தையை 'மேற்புற ஒலிகளைப்' பயன்படுத்துதல் மூலமாக நம் வீட்டு வாயிலுக்குக் கொண்டுவந்துவிடலாம். நாம் வரும் வண்டியில் ஒரு கருவியைப் பொருத்தி அதனல் மேற்புற

ஒலிகளை எழுப்ப வேண்டும்*. அந்த ஒலியினை நம் வீட்டு வாயிற் கதவில் ஏற்கனவே பொருத்தியுள்ள ஒரு கருவி வாங்கும். வாங்கியபின் அக்கதவிலுள்ள பொறி இயக்கப்பெற்று வீட்டுக் கதவு தானாகத் திறக்கும்.

மேலும், இதனைப் பொருள் காவல் நெறிக்கமைந்த 'கள்வர் காட்டியாகவும்' (Burglar's alarm) பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு இருப்புப்பெட்டி இருக்கும் அறையை 'மேற்புற ஒலிகளால்' நிரப்பிவிட வேண்டும். அவை அறைச் சுவர்களிலும், அறையிலுள்ள ஏனைய பொருள்களிலும் பட்டு பிரதிபலித்தவாறிருக்கும். அறையினுள் நடமாட்டமெதுவும் இல்லாதிருந்தால் அவற்றின் 'அலைவு எண்' மாறுபடாது ஒருபடித்தாகவே இருக்கும். அறையினுள் யாராவது நடந்தால் அவர்மீது ஒலி அலைகள் பட்டு அவற்றின் அலைவு எண் மாறுபடுகின்றது. அம்மாறுபாட்டால் ஒரு கருவி இயக்கப்பெற்று மணியடிக்கும். இது சாதாரண மின்சாரக் கள்வர் காட்டியை (Electric Burglar's alarm) விடச்சிறந்தது. இது பற்றிய ஒரு சுவையான நிகழ்ச்சி அமெரிக்காவில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. ஒரு நகைக்கடையில் ஒரு சமயம் பெரும்பொருள் திருட்டுப்போய் விட்டதாம். அதில் 'மின்சாரக் கள்வர் காட்டி' பொருத்தப்பெற்றிருந்தும் பயனில்லை. ஏனெனில், அது வழக்கமாக அறையின் வாயிலிலோ அல்லது சாளரத்திலோ பொருத்தப்பெற்றிருக்கும். அறைவாயிலாக அல்லது சாளர வழியாகத் திருடர் உள் நுழைந்தால் தான் அதுகாட்டிக் கொடுக்கும். ஆனால் கைதேர்ந்த அக்கள்வர் கூட்டத்தினர் சுவரில் கன்னம் வைத்து உள்நுழைந்து கொள்ளையிட்டுச் சென்றனர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அந்த அறையில் 'மேற்புற ஒலிகள் கள்வர் காட்டி' (Ultrasonic burglar's alarm) பொருத்தப்பெற்றது. சில திங்கள் கழித்து மீண்டும் படையெடுத்த கொள்ளைக் கூட்டத்தினர் இம்முறை கூரையைப் பிய்த்து உள்ளிறங்கித் திருடினர். ஆனால், அவர்கள் 'மேற்புற ஒலிகள் கள்வர் காட்டியை'ப்பற்றி அறியாதிருந்ததால் பிடிபட்டனர். அந்தோ பரிதாபம்!

இதுகாறும் மேற்புற ஒலிகள் குறித்த திசைப்போக்கில் செல்லும் இயல்புடையவை என்றும், அவை சிறுபொருள்களின் மீது பட்டால் வளைந்து செல்லாமல் பிரதிபலிக்குமென்றும் கண்டோம். மேற்புற ஒலிகளின் இந்தத் தன்மையினால் பெறவல்ல சிற்சில பயன்களையும் கண்டோம். இனி, போர்க்காலங்களிலும் அமைதிக்காலங்களிலும் இதனுடைய பெரும் பயன்களை அடுத்துக் காண்போம்.

* மேற்புற ஒலிகளைச் செயற்கையில் உண்டாக்கும் வழிகளைப் பிறகு காண்போம்.

தமிழ் வாழ்க!

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி

மாணவர் இலக்கியமன்ற 19-ஆம் ஆண்டுவிழாவில் (19—3—60)

அண்ணலார், திரு. **பு. அ. சுப்பிரமணியனார்**

ஆற்றிய தலைமையுரை.

தமிழ் மணம் கமழும் கரந்தைத் தமிழ்ச் சங்க உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியின் 19-ஆம் ஆண்டு விழாவில் கலந்துகொள்வது பெருமையுடைத்து. இந்த வாய்ப்பு அளித்தமைக்கு என் உளமார்ந்த நன்றி.

மேல்நாட்டவர் நாமெல்லோரும் வியப்புறும்படிப் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை யெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல துறைகளிலும் முன்னேறிக்கொண்டு செல்கிறார்கள். காரணம் அவர்கள் அறிவுப் பணிக்கே முதலிடம் கொடுத்து, மக்களிடத்து அறிவைப் பெருக்குவதில் முனைந்துள்ளமையேயாம். குழந்தைகள் நலன் பாதுகாக்கப்பட்டால் நாட்டின் நலன் பாதுகாக்கப்படும் என்றுணர்ந்து அவர்களுக்கென்று குழந்தை இல்லங்கள், விளையாட்டுத் திடல்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், திரைப்படக் காட்சி இல்லங்கள் முதலியன அமைத்து, அவர்கள் நல்ல முறையில் வளர்ந்துவரப் பாடுபட்டு வருகிறார்கள். கல்வி வளர்ச்சிக்கென்றே மிகுதியாகப் பொருட்செலவு செய்கிறார்கள்; மக்களே இதில் அக்கரைகொண்டு பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவி அறிவுப்பணியாற்றி வருகிறார்கள். அமெரிக்காவில் வணிகர்களே பல கல்விக் குழுக்களைக்கொண்டு மக்களிடத்துக் கல்வியைப் பரப்பி வருகிறார்கள். கல்விக்காக செலவிடப்படும் தொகை வீணாவதில்லை என்று அவர்கள் உணர்ந்துள்ளனர். ஆஸ்திரியாவில் ஆசிரியர்களுக்கு எல்லாவகையிலும் உதவி அவர்களின் பணியைத் திறம்படச் செய்யத் தூண்டி வருகிறார்கள். அமெரிக்கா முதலிய நாடுகளில் ஆசிரியர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு செல்லும்போது அவர்களுடைய திறனுக்கும் தொண்டுக்கும் ஏற்பப் பணமுடிப்புக் கொடுத்து அவர்களைப் பாராட்டி வருகிறார்கள். சீனாவில் கல்லூரிப்படிப்பு முடியும்வரை இலவசமாகவே படித்துவர வாய்ப்புள்ளது. ஆதலால் அங்கே கல்வி பெருகிவருகிறது. மக்கள் அறிவுபெற்றவர்களாகவும் ஆற்றல் பெற்றவர்களாகவும் உள்ளனர்.

பள்ளிகளின் வளர்ச்சிக்குப் பெற்றோர்களின் ஒத்துழைப்பு பழைய மாணவர்களின் உதவி இவை மிக மிகத் தேவை. அப்

பொழுதுதான் பள்ளி சீரும் சிறப்பும் கொண்டு விரைவாக வளர முடியும். மக்கள் சில ஆண்டுகளுக்காகிலும், மக்களில் பெரும் பான்மையோர் படித்தவர்களாகும் வரை தங்கள் ஆரவார, ஆடம்பரச் செலவுகளை யெல்லாம் கட்டுப்படுத்திப் பள்ளியின் வளர்ச்சிக்காகப்பாடுபட்டு வரவேண்டும். திருவிழா, கூத்து, சடங்குகள் முதலியவற்றிற்குச் செலவழிப்பதில் மக்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தில் ஒரு சிறு பங்கு கல்வியைப் பரப்பு வதற்காகச் செலவிடுவார்களேயானால் நாடு சிறப்படைய முடியும்.

ஆசிரியர்களின் கடமையுணர்ச்சி, தன்னலமற்ற தொண்டு, ஆசிரியத் தொழிலில் அவர்கள் கொள்ளும் ஆர்வம் இவற்றால்தான் பள்ளியின் பெயர் நிலைத்திருக்க முடியும். ஆசிரியர்கள் இளம் உள்ளங்களை உருவாக்குவதன் மூலம் உலகத்தையே உருவாக்கு கிறார்கள்.

"கல்வி கற்பிப்பதற்குச் சிறந்த முறை ஆசிரியர்கள் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதுதான்" என்று பேரறிஞர் ஈன்ஸ்டின் சொன்னார். குருநானக் ஒரு ஆசிரியரையும், ஆண்டவனையும் தன்முன் நிறுத்தி இவர்களில் யாரை முதலில் வணங்குவாய் என்று கேட்டால் ஆண்டவன் அருளைத்தேட வழி காட்டியாகவுள்ள ஆசிரியனைத்தான் நான் முதலில் வணங்குவேன் என்று சொல்வாராம்.

நம் கனம் முதலமைச்சர் பண்டித நேரு அவர்களுக்கு அவரின் இளம் பருவத்தில் ஆசிரியராக இருந்த புரூக் என்பார் அவர் உள்ளத்தில் படிப்பில் ஆர்வத்தை மூட்டி, அவரின் அறிவை நல்ல முறையில் வளர்த்து வந்ததால் அவர் இப்பொழுது உலகத்தில் சிறந்த தலைவர்களில் ஒருவராக வளர்ந்துள்ளார்.

ஆசிரியர்களின் கடமை இளம் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை யெல்லாம் வெளிக்கிளப்பி, இளைஞர்களை வருங்கால வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதியுடையோராக்க இப்பொழுது முதலே முயற்சிகொண்டு வளர, பிற்காலத்தில் அவர்கள் பேரறிஞர்களாகச் சான்றோராகவர வழிவகுப்பதே யாகும். இத்தகையோர்தாம் நல்லுலகைச் சமைப்பவர்களாக இருப்பார்கள்.

இத்தகைய ஆக்கப்பணிகள் ஆசிரியர்கள் செய்யவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்போமானால் அவர்களுக்கு நாம் நன்மதிப்புக் கொடுக்க வேண்டும். தக்க ஊதியம் நல்க வேண்டும். அவர்களும் அமைதியான நல்வாழ்வு வாழ்ந்துவர உதவவேண்டும்.

அரசினர், பொதுமக்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எல்லோரும் ஒற்றுமையாகக் கூடி, நல்ல பல திட்டங்களைத் தீட்டிக்கொண்டு செயலாற்றினாற்றான் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஒழுங்கு, கட்டுப்பாடு முதலிய பண்புகள் வளர்வதை நாம் எதிர்பார்க்கமுடியும்.

மாணவர்கள் தங்கள் அறிவைப் பெருக்கி, நற்பண்புகளை வளர்த்துவர பல நல்ல சூழ்நிலைகளை உருவாக்கித்தரவேண்டும். தொடக்கக் கல்விக் காலத்திலிருந்து அவர்கள் நூல் நிலையத்தைப்பயன்படுத்திப் படிப்பில் ஆர்வங்கொள்ளத் தக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். அவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் இருக்குமானால் பலர் நாமில்லாமலே அறிவைப் பெருக்கிக்கொள்ள முடியும். அத்துடன் சொல்திறன் பெற்ற பொதுநோக்குள்ள பேரறிவாளர்களைக்கொண்டு அறிவுரைகள் கூறச் செய்யவேண்டும். சிறுவர்களுக்கு விலங்குத்தன்மை இது, மனிதத்தன்மை இது என்ற பாகுபாட்டினை உணரச்செய்தல் வேண்டும். அவர்கள் உள்ளத்தில் படியும் மாசுகளை அப்போதைக்கப்போது துடைத்துக் கொண்டு, உள்ளத் தூய்மைகொண்டவர்களாகத் திகழ, அவர்கள் பணியாற்ற வேண்டும். இளம் பருவத்தில் மாணவர்கள் தப்புவழி செல்வார்களேயானால் பிறகு அவர்களைத் திருத்துவது எளிதன்று.

மாணவர்களுக்குச் சில கருத்துக்களைச் சொல்ல அவாவுடையேன். இது உங்களது பொற்காலம். இப்பொழுது உங்களது பொன்னான நேரத்தை வீணாக்கக்கூடாது. உங்கள் உடல், அறிவு, உள்ளம், பண்பாடு முதலானவற்றை வளர்ப்பதில் கருத்துள்ளவர்களாக இருக்கவேண்டும். வருங்கால நல்வாழ்வுக்கு இப்பொழுது முதலே நீங்கள் உங்களைத் தயார்செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

உழைப்புத்தான் உங்களை உயர்த்துவது. உழைத்து உழைத்து வந்தவர்கள்தான் செயற்கரிய செய்த பெரியார்களாக வந்துள்ளனர். சோம்பியிருந்து எவரும் பெரியவர்களாக வந்ததில்லை.

அறிவு வளம், உடல் வளம், உள்ள வளம், ஆன்ம வளம், ஒரே அளவாக வளர்ந்து வரவேண்டும். உடல் வளம் என்ற அடித்தளத்தின் மேல்தான் அறிவு வளம் முதலான கட்டிடங்கள் கட்டப்படவேண்டும். ஆதலால் அடித்தளம் மிக உறுதியாக வலுவாக இருக்கவேண்டுமென்பதை நீங்கள் உணருதல் வேண்டும்.

புற்றிலிருந்து ஈசல் வெளிவருவதுபோலத் தாழ்ந்த உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் கொண்ட எண்ணற்ற புத்தகங்கள்

வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் தூய மொழி யாவது உள்ளதாவென்றால் அதுவும் இல்லை. அப்புத்தகங்களைத் தொடுவதுகூட ஒரு தீச்செயல் என்று உணர்ந்து உலகப்பெரியார் களுடைய சீரிய கருத்துக்கொண்ட பொதுநோக்குடன் வணிக நோக்கமின்றி எழுதப்பட்ட நல்ல புத்தகங்களையே படிக்க வேண்டும். படித்தவற்றைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். அவற்றை எழுதப் பழகி எழுத்தாற்றலையும், பேசப்பழகிப் பேச்சாற்றலையும் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

நீங்கள் எல்லோரும் உயர்வு தாழ்வு மனப்பான்மையின்றி அன்புப் பிணைப்பில் இருந்து ஒற்றுமையாக வாழ்ந்து, நாட்டுக்கு நல்லவர்களாக, வல்லவர்களாக வரவேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் தூய்மையை வளர்க்கும் இறைவன் கோயில்கள். இங்கே எந்த இழி எண்ணத்திற்கும், இழி சொல்லுக்கும், இழிச்செயலுக்கும் இடமே இல்லை. நீங்கள் படிப்பில் இன்பம் காணுங்கள். இதுதான் இன்பத்திலெல்லாம் தலைமையான தூய இன்பம்.

மாத்யூ ஆர்னல்ட் தன் மகனை இழந்தார். உள்ளம் நொந்தார். துன்பத்தைப் போக்கிக்கொள்ள கடற்கரைக்குச் சென்றார். இயற்கை வனப்பில் மூழ்கினார். பிறகு நாடகத்துக்குச் சென்றார். துன்பம் நீங்கவில்லை. ஒரு நூல் நிலையத்திற்குச் சென்று, பேரறிஞர் அரிலியசு எழுதிய **ஆன்ம சிந்தனை** என்ற நூலைப் படித்தார். உள்ளம் அமைதி பெற்றது.

முசோலினி உடலில் பல குண்டுகள் தைத்திருந்தன. அவற்றை எடுக்க அறுவை மருத்துவம் செய்யப்புகுமுன் அவர் மருத்துவர்களை நோக்கித் தனக்கு மயக்கமருந்து கொடுக்க வேண்டாமென்றும், தன்னிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தால் தான் படித்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் அலுவலைச் செய்யலாம் என்று கூறினார்.

நீங்கள் அறிவை வளர்ப்பதோடு உங்கள் பண்புகளையும் வளர்த்துவர வேண்டும். படிக்கும்பொழுதே நீங்கள் ஒழுங்கு, கட்டுப்பாடு, கடமை, உணர்ச்சி முதலியன கொண்டிருப்பீர்க ளானால் பிற்காலத்தில் நீங்கள் மனிதர்களாக வாழ இயலும். உலகத்தைக் காப்பாற்ற நீங்கள் இப்பொழுது முதலே முற்பட வேண்டாம். நீங்கள் உங்களை உயர்த்திக்கொள்வீர்களானால் உலகம் தானே உயர்ந்துவிடும்.

யாங்ஙனம்?

அயிலன்.

மாந்தர் தோன்றிய பல்லாண்டுகளின் பின்னரே அவர்கட்கெல்லாம் அறிவும், பண்பும், வாழ்வும் மலர்ந்தன. அங்ஙனம் மலர்ந்த காரணத்தால்தான் நல்லன தீயன அறியவும், தக்கன தகாதன அறிந்து நடப்பவும் மேற்கொண்டு வாழலாயினர். இவ்வாறு வாழ்வு பெற்ற முதல் மனிதஇனம் தமிழினம் என்பது நிலநடுக்கோட்டை யடுத்திருந்த குமரிக்கண்ட ஆய்வாளர் தங்கொள்கையாகும்.

தீயைக்கண்டதும் அஞ்சிய மனிதன், அதன் பயனை அறிந்ததும் பாராட்டவும் வணங்கவும் தலைப்பட்டான். அவ்வழியாக அச்சத்தின் விளைவாகவே அவனிடந்தெய்வ வணக்கம்கால் கொண்டுசமய உணர்வு தோன்றலாயிற்று. தீயின் வண்ணத்தையும், எழு ஞாயிற்றின் எழிலையும், முன்னோர் கண்மீது முருகி வளர்ந்திருந்த பற்றுள்ளத்தையும் வேராகக்கொண்டு தோன்றிய சமயக் கொள்கை, தமிழரிடை ஆண், பெண் இருபாலருக்கும் இயல்பாயமைந்ததொன்றேயாம். பண்டைத் தமிழ்ப் பனுவல்களின்

12-ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஒரு சீன யாத்திரையினர் நலந்தா பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கூறியபொழுது—"இப்பல்கலைக் கழகம் தொடங்கி 700 ஆண்டுகள் ஆனபிறகும்கூட இங்கே கட்டுப்பாட்டுக் குறைவு இருந்ததேயில்லை" என்றார்.

ரூசுவெல்ட் நற்பண்புகள்தான் நாகரிகத்தின் வேர் என்றும், அவற்றை வளர்த்துவருவதுதான் கல்வியின் நோக்கம் என்றார்.

ஆகையால், பெரியோர்களே, மக்கள் எல்லோரும் அறிவுப் பணிக்கே முதலிடம் கொடுத்து, இயன்ற பொருளுதவிசெய்து, மக்களிடத்துக் கல்வியைப் பரப்பி, நற்பண்புகளை வளர்த்து, பெற்றோர்கள் குழந்தைகளின் நலனை உள்ளத்தில் கொண்டு, தக்க முயற்சி கொண்டு, ஆசிரியர்கள் தொண்டு உள்ளத்தவர்களாய், இளம் உள்ளங்களை நல்ல முறையில் உருவாக்குவதன் மூலம் உலகை உருவாக்கிக்கொண்டு, மாணவர்கள் படிப்பிலேயே தங்கள் முழு கவனத்தைச் செலுத்திக் கேவலமான உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய படக்காட்சிகளைப் பார்ப்பதை விட்டு, வருங்காலப் பேரறிஞர்களாக, சான்றோர்களாக வர இப்பொழுது முதலே எண்ணங்கொண்டு, தக்கபடி உழைத்து வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

கூற்றுக்கள் யாவும் இதனை வலியுறுத்துவனவே. ஆயினும் தமிழ் நூலாராய்ச்சியுள் தலைப்படுவார் யாவரும் "தமிழகத்துப் பெண்மக்கள் மட்டும் தலைமகனை யன்றிப் பிறதெய்வந்தொழலே யில்லை" யென ஒருதலையாகக் கூறுவதொன்றே 'அஃதெங்ஙனம்' என்ற வினாவாய் இவ்வுரை யெழுதத் தூண்டியதாகும்.

திருக்குறளில் வாழ்க்கைத் துணைநலங் கூறவந்த வள்ளுவர் பெருமான் 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை' என்றொரு குறளை யமைத்தார். பண்டைப் பழக்கங்கள் பலவற்றை மறுத்துரைக்கும் பண்புடைய அவர், தமிழகத்தில் நாங்காணுமாறுபோலக் கணவனைப் போற்றலைக் கைவிட்டுக், கடவுளைப் போற்றிய பெண்கள் சிலரைக் கண்ணுற்றிருக்கலாம். அதனால், 'நல்ல வாழ்க்கைத் துணைவி இங்ஙனம் இருத்தல் கூடாது' என்றெண்ணி இக்குறட்பாவை அவர் செய்திருத்தல் கூடும். இதுபோலவே பிற அதிகாரங் களினும் அவர் பாடியிருத்தலைக் காண்பார்க்கு இஃதொன்றும் புதுவதாய்க் காணப்படாது. வாய்மையை விரித்துப் புகழுங்கால 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற, செய்யாமை செய்யாமை நன்று' என உரைத்து, கொல்லாமை கூறுங்காலை, 'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று' என்றும் ஓர் இயலிலேயே சொல்லியிருத்தலைக் காணலாம். ஆதலால் கற்புடைய மகளிர் 'எக்காலத்தும் தெய்வந்தொழுததே யில்லை' என்றல் எங்ஙனம் பொருந்தும்?

இனி, 'தெய்வந் தொழாஅள்' என்ற குறட்பாவுக்குப் பொருந்துமாறு கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி தோழியான தேவந்தியிடம் உரைத்த இருசொற்களையே தலைசிறந்த எடுத்துக் காட்டாக உரைப்பர். அதனையும் ஆராய்வாம்.

மாபெரும் பத்தினியாகிய கண்ணகியை மணந்து, மகிழ்ந்து, கலந்து, வாழ்ந்த கோவலன், கலைக்கவர்ச்சி காரணமாக மாதவி யிடத்தே மாறாக் காதல்கொண்டு, அவளோடு மகிழ்ந்துறைந் தானாக, துணைவனைப் பிரிந்த துயரால் நலமெல்லாமிழந்து, நவிந் துறைந்த கண்ணகி ஒருநாள் நள்ளிரவில் கனவொன்று கண்டு, கவலைகொண்டு, தன் மனத்துக்கினிய தோழியாவ தேவந்தியிடம் அதனையுரைத்து வருந்துவாளாயினள். தேவந்தி புகார் நகரத் தெய்வமாகிய பாசண்டசாத்தன் மனையாட்டியாதலாலும், அவளுடைய மாமியான மாலதியின் மனக்கவலை தீர்த்த அச்சாத் தனின் கோவிலை வழிபடும் பண்பு தேவந்தியிடம் உண்டாத லாலும், அன்றும் அவள் சாத்தன் கோவிலிலிருந்து வந்து தன்னை வாழ்த்தியமையாலும், தன் துயரத்துக்கு அவள் வழி

ஏதாவது மாற்றம் கிடைக்கலாமென்ற எண்ணம் இருந்தமையாலும், கண்ணகி, தேவந்தியிடம், தன் கனு நிகழ்ச்சியைக் கவலையுடன் தெரிவித்தாள். தேவந்தி அதற்கு மறுமொழியாகக் 'காவிரி கடலொடு கலக்குமிடத்திலுள்ள சோமகுண்டம், சூரிய குண்டமென்ற நீர்நிலைகளில் மூழ்கி, மன்மதன் கோவிலை வழிபட்டால் இம்மையிலும், மறுமையிலும் கணவனோடு கூடிவாழலாம்; நாமும் அவ்வாறு ஒருநாள் மூழ்கி வழிபட்டு வருவோம்' என்றாள். இதுகேட்ட கண்ணகி, 'பீடன்று' என்றுரைத்தாள். இந்த இடத்தில் இளங்கோவடிகள் இயம்புந்தொடர்:

> "... ... ...யாமொருநாள்
> ஆடுதும் என்ற அணியிழைக்கவ் வாயிழையாள்
> பீடன் றெனவிருந்த பின்னரே" என்பதாம்.

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்ற குறள் தொடருக்கு இதனைச் சிறந்த எடுத்துக் காட்டாகக்கொண்டு 'இது எங்குடிக்குப் பெருமைதரும் வழக்கமில்லை' என்று கூறினாதாகப் பொருள் விரித்து, அப்பற்றுக்கோடே வழியாகப் பண்டைத் தமிழ்ப்பெண்டிர் தெய்வந்தொழல் இல்லையென்று அறுதியிடுதல் எங்ஙனம் ஏற்புடையதாகும்? கணவன் விரும்புவதையே தனக்குமுரிய வேட்கையாகக்கொண்டு, அவனுக்காகவே வாழும் பண்புகெழுமிய கண்ணகி, தெய்வத்தின் துணைகொண்டு வேண்டுவதாகத் தேவந்தியுரைத்தது, கணவனாகிய கோவலனின் 'வேட்கை மறப்பு' என்பதை மனங்கொண்டவளாய், 'எனக்குப் பெருமை தராது, இஃது எளிமையான தன்னல வாழ்விற்செய்யுஞ் செயல்' என்றெல்லாம் எண்ணியவளாய்ப் 'பீடு அன்று' என்று ரைத்தாளாகக் குறளுக்குப் பிழைப்படப் பொருளுணர்ந்த தன்மையால் ஒருமுகமாக அனைவரும் தெய்வந்தொழவில்லை என்றல் ஒரு சிறிதுஞ் சாலாது.

மேலும், பண்டைத்தமிழ்ப்பெருமக்கள் தம் வாழ்வியலை அகமும் புறமுமாக ஆய்ந்து அறிவுறுத்தும் பழம்பெருநூலாகிய தொல்காப்பியத்தின் கண்ணே, உள்ளத்து நிகழ்ச்சியைப் புறத்தார்க்குப் புலப்படுத்தும் மெய்ப்பாடுகளை விளக்கும் மெய்ப்பாட்டியலிலே, மணம்புரிந்து மனையறத்திலே தலைப்பட்ட தலைமகள் மெய்ப்பாடுகளை விளக்கும் நூற்பா ஒன்று வருகிறது. அஃது 'அழிவில் கூட்டத்து' மெய்ப்பாடுகள் பதினொன்றையுரைக்குங்கால் முதல் மெய்ப்பாடாக உரைப்பது "தெய்வம் அஞ்சல்" என்பதாம். இதற்குப் பொருள் விரிக்கப்புகுந்த உரையாசிரியச் சான்றோரெல்லாம் 'கொண்டானையன்றிப் பிறிது தெய்வமில்லை' என்னுங் கொள்கையராதலின் 'கணவன் தன் குலதெய்வம் முதலியவற்றை

அவனுணர்த்த அறிந்து வழிபடுதலாகும்' என்று உரைவிடுத்தனர். ஆயினும், நாம் தொடக்கத்திற் கூறியாங்கு, மென்மைத் தன்மைமிக்க மகளிர் தம் தலைவன் பொருட்டாகவேனும் தெய்வத்துக்கு அஞ்சி, வணங்கி, வழிபட்ட ஒழுகலாறுடையர் என்றற்கு ஏற்புடைய சான்றுகளாக எட்டுத்தொகை நூல்களிற் பல காணலாம்.

பரத்தையிற் பிரிந்த தலைவன் தெய்வத்தை முன்னிட்டு உரைத்த பல்வேறு பொய்ம்மலிந்த சூளுரைகளைக் கொண்டு அதனால் அவர்க்குக் கேடு வருமென்று அஞ்சியதாக,

> "அச்சாறாக உணரிய வருபவன்
> பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல்"

எனவரும் மருதக் கலியின் வரிகளும், தலைவனை நோக்கிப் புலந்துரைத்த

> "நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
> யார்மேல் விளியுமோ கூற்று"

என்னும் வரிகளும்,

> "மன்ற மராத்த பேஎமுதிர் கடவுள்
> கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்
> கொடியர் அல்லரெங் குன்றுகெழு நாடர்
> பசைஇப் பசந்தன்று நுதலே
> ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே"

எனவரூஉம் குறுந்தொகைப் பாடலும் சிறந்த சான்றுகளாம்.

ஆதலான் அச்சத்தின் அடியாகப் பிறந்த 'தெய்வ வணக்கம்' இருபாலார்க்கும் பொதுவென்பதும், 'தெய்வந் தொழாஅள்' என்பது கணவனை வழிபடவேண்டுமென வலியுறுத்தவந்ததென்பதும், சிலப்பதிகாரத்தில் கண்ணகி கூற்றாக வரூஉந்தொடர் கற்புடைப்பெண்டிர் கடவுளை வழிபடலின்றென நேரிடையாக மறுத்திலதென்பதும், மகளிர் தெய்வம் அஞ்சும் இயல்பைத் தொல்காப்பியம் மெய்ப்பாடாகக் கூறியுள்ளதென்பதும், சங்க நூல்களிலும், தெய்வமஞ்சிய பெண்களினியல்பிற்குச் சான்றுகள் பலவுள்ளமையுங்கொண்டு 'பண்டைத் தமிழ்க் கற்புடைய மகளிர்க்குத் தெய்வ வழிபாடு இல்லை' யென்றல் சாலாதென்பதும் தெளிவாம்.

தஞ்சாவூர் - புறம்படி - கருந்திட்டைக்குடி.

வித்துவான், சி. கோவிந்தராசனார்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

தஞ்சை அல்லது தஞ்சாவூர் என்னும் ஊர்ப்பெயருக்கு உரியதாக இதுவரையில் பலவாறான விளக்கங்கள் வெளி வந்துள்ளன. அவற்றுள் :—

(1) ஆவூர் என்பதே தஞ்சையின் பழமையான பெயர். முன்னொருகால் தஞ்சன் என்னும் அரக்கனொருவன் இவ்வூரை ஆண்டுவந்தான். அவன் கொடுமைக்கு ஆற்றாத பராசரர் முதலிய தவத்தோரின் விருப்பப்படி உமாதேவி அவனைப் போரிட்டுக் கொன்றாள். அவன் இறக்கும்போது தன் பெயராலேயே இவ்வூர் அழைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதனால், தஞ்சன் + ஆ + ஊர் = தஞ்சாவூர் என்று வழங்கி வருகிறது என்பது ஒன்றாகும். இக்கதை, தஞ்சைப் புராணத்தின் அடிப் படையில் தோன்றியதாகும்.

(2) "சோழநாடு சோறுடைத்து" என்னும் சிறப்பால் நல்ல வளமுடைய நாடு என்பது தெளிவு. வளமுடைய நாட்டை மக்கள் வாழ்வின் பொருட்டு நாடிவருதல் இயல்பு. வருவார்க் கெல்லாம் வஞ்சமின்றித் தஞ்சம் அளித்துப் புகழ்பெற்றமையால் தஞ்சம் + ஆ + ஊர் = தஞ்சாவூர் என்றழைக்கப்பட்டது; என்று கூறப்படுவது மற்றொன்றாகும். இன்னும் சிலவுளவேனும், அவற்றுள் புனைந்துரைமிகுந்தமையால் விடுத்து மேற்செல்லுதும்.

தமிழகத்தில் விளங்கிய மூன்று நாடுகளையும், சேரநாடு வேழமுடைத்து, பாண்டிநாடு முத்துடைத்து, சோழநாடு சோறுடைத்து என்று அவ்வவற்றின் சிறப்பான இயற்கைப் பயனையே இலக்காகக்கொண்டு சிறப்பித்துள்ளனர். சோழநாட்டின் தலைமையாக என்றும் மாறாமல் விளங்கிய பகுதி இன்றுள்ள தஞ்சை மாவட்டம் உறையூரளவில் பரந்து நின்றதேயாம். வானிலை பிறழினும் தானிலை திரியாத் தண்டமிழ்க் காவிரி, பல கால்கொடு புக்கு, கழனி பல்லாயிரம் அளாவி, இப்பகுதியை மிக்க வள முடையதாக்கியுளது. காவிரி, தான் தோன்றிய குடகுநாடு முதல் நெடிய தொலைவு வழிக்கொண்டு பலநாடுகளை ஊடுருவி இழிந்தும் அவற்றிற்கெல்லாம் பெரும்பயன் நல்காது, பெயர்ந் தோடிவந்து, கடலையடுத்த சோழநாட்டிலேயே மெல்லென

ஊர்ந்து பல்வளம் கண்டுளது. இத்தகு இயல்பினாலேயே காவிரி புரக்கும் நாடென்றும், புனல் நாடென்றும், புகழ்பெற்றுளது இச்சோணாடு. எனவே, நீருயர நெற்பயிருயர்ந்து தண்ணெனும் காட்சி நாடெங்கும் பருவ காலங்களில் மாட்சியுடன் இலங்குதல் இயல்பன்றோ. அத்தகு காட்சிமிகு செய்கள் எண்ணிலவாய், நிலமகள் போர்த்துள்ள பச்சைப் பட்டாடையென யாண்டும் மருதநிலப் பாங்கே செறிந்து நின்று காண்டற்கு இனியவாய்த் திகழ்ந்தமை கொண்டே தண்மை+செய்=தண்செய் என்று இப் பகுதியை ஆன்றோர் பெயரிட்டு அழைத்தனர்போலும்! அப் பண்புள்ள பெயர் காலப்போக்கில் ஒலியளவில் மாற்றமடைந்து, நன்செய் புன்செய் என்பன நஞ்சை புஞ்சை என வழக்காற்றில் வந்துளமைபோல, **தண்செய் தஞ்சை** என வந்துளது எனலாம்.

தஞ்சை என்னும் பெயர் எப்பொழுது ஏற்பட்டது என்பதை அறுதியிட்டுக் கூறுதற்கியலவில்லை. ஆயினும், கி.பி ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து வழக்கில் இருந்து வந்துளது என்பதைத் தெளிய ஏதுஉளது. இக்காலத்தில் வாழ்ந்தவராக வரலாறுகள் கூறுகின்ற திருநாவுக்கரசு நாயனார், சிவனுறையும் திருத் தலங்களைத் தொகுத்துக்கூறு முகத்தா னுரைத்துள்ள தமது தாண்டகத்தினுள், "தஞ்சை, வழுவூர், வீரட்டம், மாதானம்" என்றும், 'தஞ்சைத் தளிக்குளத்தார்' என்றும் தஞ்சையைக் குறித்துள்ளார்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கிய பல்லவப் பேரரசன் இரண்டாம் நந்திவர்மனின் கீழிருந்து தஞ்சைப் பகுதியை அரசாண்ட குறுநில மன்னனாகிய சுவரன் மாறன் என்னும் முத்தரைய மன்னனைப் பற்றி, பாச்சில்வேள் நம்பன் என்னும் புலவர் பாடிய, செந்தலை சுந்தரேசுவரர் கோயில் மண்டபத்திலுள்ள நியமத்துப்பிடாரியார் கோயில் தூண்களில் காணப்படும் பழமையான கல்வெட்டுப் பாடல்களில் "வாகைப் பூக்குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன்—தஞ்சைக்கோன் என்றும், "கள்வர் கள்வன் தஞ்சை நற்புகழான்" என்றும் கூறப்பட்டுள்ளன. அடுத்து, அந்நூற்றாண்டிலேயே வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமங்கையாழ்வாரும், "வாடினேன் என்று தொடங்கும் தமது திருமொழியின்கண் ஆறுவது பாடலில், வம்புலாம்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி" என்றும், ஐந்தாம் திருமொழி மூன்றும் பாடலில், "வரைமீகானில் தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை" என்றும் கூறியுள்ளார். மற்றும் முதலாழ்வார் மூவருள் ஒருவரான பூதத்தாழ்வாரும், "தமருள்ளம்

தஞ்சை தலையரங்கம் தண்கால் தமருள்ளுந் தண்பொருப்புவேலை"
என்றும், திருமால் அமரும் இடங்களைக் கூறுமுகத்தான் தஞ்சை என்றே கூறியுள்ளார். இவ்வாறு கி.பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து தஞ்சை என்ற பெயரே வழக்கிலிருந்ததென்பது புலனாகிறது. எனவே, தஞ்சை என்பது மரூஉ வென்று கொண்டு நோக்குதற்கு மேற்கூறியுள்ள சான்றுகட்குரிய காலங்களில் தஞ்சாவூர் என்று வழங்கியதாகத் தெரியவில்லை. பின்னர், பத்தாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தோன்றிய சோழர் காலக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் தஞ்சாவூர் என்றும் தஞ்சை என்றும் விரவி வழங்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, முதல் இராசராசனுடைய தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டில், "தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி" என்று கூறப்பெற்றுளது.

எனவே, நன்னிலம், காழி, வல்லம், திட்டை, அரங்கம் என்னும் இயற்கையின் சுவட்டாலெழுந்த பெயர்கள் எவ்வாறு ஊர்களை உணர்த்தி நிற்கின்றனவோ அதைப்போலவே தண்செய் என்னும் செம்மையான பெயரின் திரிபாக வழக்கிலுள்ள தஞ்சை என்னும் பெயர் ஊரை உணர்த்தி நின்றதென்பதும், பின்னர் விரிவுபெற்றுத் தஞ்சாவூர் என்றுள்ளதென்பதும் கொள்ளத் தகுதியாகவுளது. மற்றும், முதல் இராசராசன் காலத்தில் தோன்றிய கல்வெட்டுகளில், 'தஞ்சாவூர் சயபீமதளி', 'தஞ்சாவூர் பிரமகுட்டம்', 'தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக்கோயில்' என்னும் பகுதிகள் இக்கருத்தினைக்கொண்டு சிந்திப்பதற்குரியன.

தஞ்சைமாநகர் சோழநாட்டிற்குத் தலைநகராக அமைந்ததற்குரிய ஏதுவினை ஆராய்தல் நன்றாம். பண்டைச் சோழப்பேரரசுகட்கு, ஆரூர், உறையூர், புகார் முதலிய இடங்கள் அவ்வக்காலங்களில் தலைமை யெய்தியிருந்தமையைச் சங்க இலக்கியங்களும், வரலாறுகளும் நன்கு பகரும். ஆரூரும்—உறையூரும் ஆறார்ந்து அழிவு பெற்றுவிட்டன என்பதை, இன்று கிடைக்கின்ற புதைபொருள் ஆராய்ச்சியின்பயனாய் அறியமுடிகிறது. புகார் கடல் புகுந்து அழிவுற்றது என்பதை, சங்க இலக்கியங்கள் நன்கு உணர்த்திவிட்டன. எனவே அடுத்துச் சோழநாட்டை அரசாளத் தொடங்கியவர்கள் மேற்குறித்த இயற்கையழிவுகட்கு இலக்காகாத இடத்தினைத் தேர்ந்தெடுத்தனர். அதற்குத் தக்க நிலப்பாங்கும் ஆட்சிக்கு ஏற்புடையதுமாகவுள்ள பகுதியே ஏற்றதாகும். எனவே, நாட்டின் நடுவேயுள்ளதும், வலிய மண்ணும், பாறைத் தளமும் கூடிய மேட்டுப்பாங்கின் (பீடபூமி) தொடக்கமாக உள்ளதும், இயற்கைச் சூழலில் நீர்வளமிக்கதுமான இடத்தைத்

தேர்ந்தெடுத்தனர். அதற்குப் பெருநிலப்பரப்பிற்கிருந்த பொதுப் பெயரைச் சிறப்புடையதாக்கித் தஞ்சை எனப் பெயரிட்டனர். தஞ்சை தலைநகரமாகியது. மாளிகையும், பூங்காவும், கோட்டைக் கொத்தளங்களும் எழுந்தன. 'மாமதிள் தஞ்சை' என்று திருமங்கை மன்னனும், 'இஞ்சிசூழ் தஞ்சை' என்று கருவூராரும் ஏற்புடன் சிறப்பிக்கும் அளவிற்குத் தஞ்சைமா நகரம் தழைத் தோங்கியது.

தஞ்சைமா நகரின் வடபால் எல்லையிட்டதைப் போன்று கிழக்கு மேற்காக ஓடும் ஆறு வடவாறென்றே பெயர் பெற்றுள்ளது. இவ்வாற்றை வீரசோழ வடவாறென்று பிற்காலக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இவ்வாற்றின் வடகரையில் அமைந்துள்ள பகுதி கருந்திட்டைக்குடியாகும். இது, தஞ்சையின் புறம்படி என்று கல்வெட்டுகளில் வழங்கப்பெற்றுள்ளமையால், தஞ்சையின் புறநகர் என்பது தெளிவாகின்றது. இவ்வூரினை, கி. பி. 1002-ல் எழுந்துள்ள முதல் இராசராசன் கல்வெட்டில், "தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் வட கரை கருந்திட்டைக்குடி" என்றும், கி. பி. 1015, 22 ஆகிய ஆண்டுகளில் உண்டான முதல் இராசேந்திரன் கல்வெட்டுகளில் முறையே "தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்க் கருந்திட்டைக் குடி", "தஞ்சாவூர் புறம்படி கருந்திட்டைக்குடி" என்றும் கூறப் பட்டுள்ளன. மற்றும் திருநாவுக்கரசு நாயனார் தமது திருத் தாண்டகப் பாடலுள் "நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்குடி நல்லக் குடி நளி நாட்டியத் தான்குடி, கற்குடி தென் களக்குடி செங்காட்டாங்குடி கருந்திட்டைக்குடி கடையக்குடி" என்றும் சிவத்தலங்களை அடைவுபடுத்திக் கூறியுள்ளவற்றில் குறித்துள்ளார். இதனால் கி. பி. ஏழாம் நூற்றாண்டுகளிலேயே தெளிவாக, கருந்திட்டைக்குடி என்று அழைக்கப்பட்டுள்ளமை தெளிவாம்.

இத்தகைய கருந்திட்டைக்குடியின் தெற்கு எல்லையாக வடவாறும், வடக்கு எல்லையாக வெண்ணாறும், குறுகிய தொலைவில் அமைந்து இடையே திட்டென விளங்கும் பான்மை யினால் திட்டை என்றும், மக்கட் செறிவில்லாத அக்காலத்தில் வளமுள்ள இப்பகுதியில் மரங்கள் செறிந்து தோற்றத்திற்குக் கருங்காடாய் விளங்கியமை குறித்து அடையடுத்துக் கருந்திட்டை யென்றும், பின்னர் மக்கள் இப்பகுதியில் வாழ்க்கை மேற்கொள்ளப் புகுந்தகாலை, அதன் சுவடாக கருந்திட்டைக்குடி என்றும் விரிந்தும் பெயர் பெற்றுள்ளது போலும்!

செம்மை நிறைந்து நின்ற கருந்திட்டைக்குடி பிற்காலத்தில் கருந்தட்டாங்குடி என்று ஆகிநின்ற அவலத்தை, எண்ணித் துணிந்து மாற்றிய பெருமை, கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்று பெயரிட்டுத் தோற்றுவித்தாரின் ஆற்றலேயாகும். கருந்தட்டாங் குடி என்று கூற அஞ்சி, கரந்தை எனும் மரூஉவினைக்கண்ட எமது தமிழ்ச் சங்கம் இனி ஓராண்டில் பொன்விழாப் பெற்றுப்பொலிய விருக்கின்றது. பொன்விழாவின் சின்னமாகவும், "மீட்டல் கரந்தை" எனும் மேலுரையின் பயனாகவும், கருந்தட்டாங்குடி எனும் பிழைபொருந்தியபெயர் மாறிக் கருந்திட்டைக்குடி என்றே மீண்டும் விளங்கவேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

இக்கருந்திட்டைக்குடியின் பழமைக்குரிய சின்னங்கள் பல வுளவேனும், அவற்றுள் மிக்க தொன்மையானது, இன்று கருவேலநாதர், வசிட்டேசுவரர் என்றெல்லாம் அழைக்கப்படும் சிவனுக்குரிய கோட்டமாகும். இக்கோயில், தஞ்சைப் பெரிய கோயில் தோன்றுவதற்கு முன்னரேயே நன்னிலையில் சிறப்புற் றிருந்ததாகும். மற்றும், முதற் கரிகாலச்சோழன் இக்கோயிலைத் தோற்றுவித்தான் என்ற செய்தியும் நிலவிவருகிறது. இப்பகுதி காடாக இருந்தமையை, கருவேற்கானம், பற்பூரகானம், வன்னி யஞ்சோலை என்றெல்லாம் தஞ்சைப் புராணம் கூறுகின்றது. இக் கோயிலின் கருவறையில், முதல் இராசராசன், முதல் இராசேந் திரன் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பத்துக்குமேல் உள்ளன. சில கல்வெட்டுகள், திருச்சுற்றின் தளவரிசை உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாகப் புதையுண்டு நிற்கும் கருவறையின் அடிப்படையில் மறைந்துள்ளன. இவற்றுள் பத்துக் கல்வெட்டுகளை அரசியலார் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி 5-ல் வெளியிட்டுள்ளனர். இக்கல்வெட்டுகளுள், முதல் இராசராசனின் ஆட்சியாண்டு 17-ல் எழுந்ததும், குந்தவை பிராட்டியாரால் இக்கோயில் நந்தாவிளக்கு எரிப்பதற்குரிய நிபந்தமாக, ஊர்ச்சபையாரிடம் நிலம் விலைக்குப்பெற்ற நிகழ்ச்சியைக் கூறுவதுமான கல்வெட்டே பெரிய அளவுடைய தாகும்.

இக்கோயிலில் இன்றுள்ள துவாரபாலகர்களைச் செய்தமைத் தது, செம்பொற் கோட்டத்து, பட்டினநாட்டுப் பழம்பட்டினத்து இருக்கும் வெள்ளாட்டி அருணிலிமலைப் பிராட்டி என்பவளாகு மென்பதைக் கருவறையின் கிழக்குப் புறச்சுவரிலுள்ள கல் வெட்டு உணர்த்துகின்றது.

கருவறையின் புறமாக அமைக்கப்பெறும் சிற்ப மாடங்களுள் (கோஷ்ட பஞ்சரம்) சிற்ப இலக்கணத்தால் சிறந்த தெய்வத்

திருமேனிகள் உயிர்ப்புடன் விளங்குகின்றன. மேற்குப்புறமுள்ள பிச்சதேவர், வடக்குப்புறமுள்ள துர்க்கை, தெற்குப்புறமுள்ள ஆடவல்லானின் எஞ்சிய திருமேனி ஆகியவைகள் அழகுக் கலைக்கோரிருப்பிடமாகவும், கருத்துக்கு இலக்காகவும் அமைந்து ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழகத்தில் வளர்ந்த சிற்பக் கலைக்கோர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. இவற்றுடன், கருவறையின் தென்புறத்திலேயே வலப்புறமாகவுள்ள திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய சமய குரவர்களின் படிமங்கள் கண்டு களிக்கத்தக்கவை. அப்பர்பெருமான் சமண்சார்ந்து சூலை நோயுற்றுப் பின்னர், சிவபெருமானருளால் நோய் நீங்கப்பெற்ருரென்பதைச் சைவவுலகம் நன்கறியும். சூலைநோயுடன் துன்புற்ற அப்பரின் நிலையைச் சிற்பி அப்படியே உருவாக்கியுள்ளார். வலது கையால் வயிற்றைத் தடவிக்கொண்டு, நோயின் கொடுமையைக் காட்டும் முகக்குறியுடன் அடியார் நிற்கும் காட்சி வரலாற்றுண்மைக்கு இலக்காகிறது. மற்றும், கருவறையின் மேற்புறம் பிச்சதேவரைச் சார்ந்துள்ள உமையொருபாக மூர்த்தம் இடப்பாகத்தில் பெண்மைக்குறிகள் அமையாது வலப்பக்கம் அமைந்து புதுமையுடன் விளங்குகிறது. இச்சிவன் கோயிலின் வடக்குத் திருச்சுற்றில் இணைந்தபாங்கில் அமைந்துள்ள செல்வி அம்மன் கோயில் பழமை பொருந்தியதாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி

மாணவர் இலக்கிய மன்ற ஆண்டுவிழா.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கியமன்ற ஆண்டுவிழா புதுக்கோட்டை, திருக்குறள் கழகத் தலைவர், அண்ணலார் திரு. பு. அ. சுப்பிரமணியனுர் அவர்கள் தலைமையில் 19—3—60-ல் சிறப்புற நிகழ்ந்தது. அரசர் சரபோசிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ., அவர்கள் 'செவிநுகர் கனிகள்' என்ற பொருள் பற்றி விரிவுரையாற்றினர். மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் சிறப்புற நிகழ்ந்தன. இராதா கிருட்டின தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியர்களும் பங்குகொண்டு விழாவை மேலும் சிறப்புறச் செய்தனர். மாணவியர் பங்குகொண்ட கும்மி, கோலாட்டம், நாட்டியம் முதலான நிகழ்ச்சிகளும், மாணவர்கள் பங்குகொண்ட நாடகம் முதலான நிகழ்ச்சிகளும் சிறப்புடனிருந்தன. இவ்விழா பல்லாற்ருனுஞ் சிறத்தற்கு முதலாக நின்ற ஆசிரியர் மாணவரனைவரையும் பாராட்டுகின்ருேம்.

(பொழிற்ருெண்டர்.)

இன்சொலும்—வன்சொலும்.

(வித்துவான் கு. சின்னையன், தஞ்சை.)

பொன்னின் தரத்தை உரைகல்லாலும், அறுசுவையின் இயல்பினை நாவாலும், இருவகை நாற்றத்தை மூக்காலும், தட்ப—வெப்ப நிலையை உடலாலும், நன்மை தீமைகளை அறிவாலும் அறிந்து கொள்கின்றோம். ஆனால் இன்சொல்—வன்சொல் என்பவற்றை ஒலியால் மட்டும் உணர்ந்து கொள்ளாமல், உரைப்பவரின் உள்ளத்தைக் கொண்டும், உரைக்கும் பொருளைக் கொண்டும் பயனைக் கொண்டும் உணர்ந்து கொள்கின்றோம்.

இன்சொல்லிற்கு இலக்கணங் கூறிய திருவள்ளுவர்,

'இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்'

என்று கூறியுள்ளார். இதற்கு உரை எழுதிய பரிமேலழகர் அன்போடு கலந்து வஞ்சனையில்லாதனவாகிய அறத்தினை யுணர்ந்தார் வாயிற் சொற்களே இன்சொற்களாகும்' என்று கூறியுள்ளார். சொல் இனிமையாக மட்டும் இருந்தால் போதாதென்பதற்காக ஈரம் அளைஇ' என்றும், களங்கமற்ற நெஞ்சுடன் கூறவேண்டும் என்ப தற்காகப் 'படிறிலவாம்' என்றும், சொற்கள் இனிமையாக இருந்தாலும்—கடுமையாக இருந்தாலும், சொல்பவர் நன்மையான வற்றை நாடிச்சொல்ல வேண்டுமென்பதற்காகச் 'செம்பொருள் கண்டார், என்றும், கூறுஞ் சொற்கள் உண்மையாயிருக்க வேண்டு மென்பதற்காக 'வாய்ச்சொல்' என்றும் கூறியிருப்பது அறியத்தக்க தாகும்.

தூய எண்ணத்தோடு கூடிய ஒருவன், மற்றொருவனைக் கண்ட போது முகத்தால் விரும்பி நோக்கிப் பின் அவன் தன்பால் அணுகிய போது மனமகிழ்ச்சியோடு கூறும் சொற்களே அறம் பயக்கும் இன் சொற்களாகும் என்பதனை

'முகத்தால் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே யறம்'

என்று கூறியுள்ளார். ஒருவன் கூறும் சொற்கள் எங்ஙனமிருப்பினும் அவை நல்லெண்ணத்தோடு கூறவேண்டுமென்பதனைத் தெரிவித்தற் காகவே 'அகத்தானும் இன்சொல்' என்று சிறப்பித்துள்ளார். மேலும் பொருளால் பிறர்க்கு நன்மையைக் கொடுக்கும் வன்சொற்கள் இனிமைப் பண்பினின்று நீங்காத சொற்கள் ஆகும் இவை இம்மைக்கு நீதியையுண்டாக்கி, மறுமைக்கு அறத்தையும் பயக்கும் என்பதனையும்

'நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்'

என்று கூறியுள்ளார். இன்சொல்–வன்சொல் என்பவற்றை ஒலியால் மட்டும் உணரக் கூடாதென்பதற்காகவும், அவற்றின் பொருளைக்கொண்டும், கூறுபவரின் இயல்பைக் கொண்டும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும் கூடாநட்பு என்னும் அதிகாரத்தில்

'முகத்தின் இனிய நகாஅ வகத்தின்ன
வஞ்சரை யஞ்சப் படும்'

என்று கூறியுள்ளார். முகத்தால் இனியவராகச்சிரித்து மனத்தால் இன்னாதவராகிய வஞ்சகரைக் கண்டு அஞ்சவேண்டும்' என்பது இக்குறட்பாவின் பொருளாகும். இதில் நகையின் வகை பற்றி 'இனிய' என்றும், அகத்திலுள்ள பகையை மறைத்து புறத்தில் நகையை விளைவித்தலால் 'வஞ்சர்' என்றும், அவரது பகை குறிப் பாலறிதற்குரிய கருவியாகிய முகத்தால் தோன்றாமையால் 'அஞ்சப் படும்' என்றும், திருவள்ளுவர் கூறியிருப்பது கூர்ந்து நோக்கத் தக்கதாம்.

பகைவர்கள் நண்பர்களைப் போல நன்மைபயக்கும் சொற்களைச் சொன்னாலும், அவர்களின் சொற்கள் நன்மைபயவா வென்பதைக் கூறும்போதே யறிந்து கொள்ளலாம். இதனைத் திருவள்ளுவர்,

'நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும்'

என்று கூறியுள்ளார். சொற்களைக் கொண்டு தெளிவடையக் கூடாதென்பதற்காகவே 'சொல்வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க' என்றும் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாகச் சில காண்போம்.

உலக உத்தமர் காந்தியடிகளைச் சுடுதற்குச் சென்ற கோட்சே என்பவன், காந்தியடிகளைக் கண்டு வணங்கி 'பாபுஜி ஏன் இன்று இவ்வளவு காலதாமதமாக வந்தீர்கள் என்று பணிவாகக் கேட்டான். அவன் கூறிய சொற்கள், ஒலியால் இனியன வாயினும், உள்ளத்தில் இன்னாத நினைந்து கூறினாதலின் வன்சொற்களேயாகும்.

நாளையதினம் நடைபெறவிருக்கும் தேர்விற்குரிய பாடங்களைப் படிக்காமல் இன்றையதினம் புதிதாக வந்திருக்கும் பேசும்படத்தைக் காணச் செல்லும் மகனை நோக்கி, சினிமாவிற்குச் சென்றால் உன் உடம்புத்தோலை உரித்து விடுவேன் என்று தந்தை கூறுகின்றான். இச்சொற்கள் ஒலியால் வன்சொற்களாயினும், அவன் மீதுள்ள அன்புகாரணமாக, அவனை நன்னெறிப் படுத்தற்குக் கூறிய இடித்துரையாதலின் இனிமைப் பண்பிலிருந்து நீங்காத சொற்களேயாகும்.

உடம்புத்தோலை உரித்துவிடுவேன் என்பது எங்ஙனம் இன்சொற்களாகு மெனின், தந்தையின் தொழில் மகனின் உடம்புத்

தோலை உரிப்பதன்று. தம்பி! சினிமாவுக்குப் போகாதே பாடத்தைப் படியென்றால் மகனின் குழந்தையுள்ளம் தந்தையின் கட்டளையை ஏற்றுக்கொள்ளாது ஒலியால் இனிமையான சொற்களால் திருத்த முடியாதபோது இடித்துக்கூறி அவனுக்கு இனிமை பயக்க விரும்புவதால் அவை இன்சொற்களேயாகும்.

தாயானவள், குழந்தையின் காலையும் கையையும் பிடித்துக் கொண்டு வாயில் பாலடையை வைத்துப் பாலுடன் விளக்கெண்ணையைக் கலந் தூட்டும்போது குழந்தை மருந்தினைக் குடிக்காமல் அழுதாலும், வாயால் வெளியே உமிழ்ந்தாலும் சிறிதும் கலங்காமல் அம்மருந்தினை குழந்தைக்கூட்டுகின்றாள். பிறர்மீதுள்ள அன்பு காரணமாக அறத்தினை வற்புறுத்திக்கூறும் சான்றோர்கள் இத்தகைய தாயினை யொத்தவராவார்கள். இதனைக்

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்நெறித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாயனையர்—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிது நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார்.

என்று அறநெறிச்சாரம் என்னும் நூல் அறிவிக்கின்றது. இக்கருத்தை யொட்டியே குமரகுருபரர்,

'இனியவர் என்சொலினும் இன்சொல்லே ஒன்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்'

என்று நீதிநெறி விளக்கத்தில் கூறியுள்ளார். தீயைப் போல் சுடும் வெங்காரமானது வெம்மையை விளைப்பதாகக் காணப்பட்டாலும், நோயினை நீக்கி உடல் நலம் என்னும் குளிர்ச்சியைத் தருகின்றது. நஞ்சானது உடல் மயிர்கள் சிலிர்க்கும்படிக் குளிர்ச்சியைக் கொடுத்தாலும் பின்னர்க் கொன்றுவிடுகின்றது. அதுபோலச் சான்றோர் கேட்போர்க்கு விருப்பமில்லாத சொற்களைச் சொன்னபோதிலும் அவை பின்னர் நனமையை விளைக்குமாதலால் இனியசொற்களேயாகும் தீயவர் கனிநது கூறும் சொற்களைச் சொன்னலும் அவை தீமையை விளைக்குமாதலால் நஞ்சேயாகும் என்பதே இச்செய்யுளின் கருத்தாகும். இவ்வாறே சிவப்பிரகாசர் தாமியற்றிய 'நன்னெறி' என்னும் நீதி நூலில்

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு'

என்று கூறியுள்ளார். குற்றமற்ற மனத்துடன் சாக்கியநாயனரிட்ட கற்கள், இறைவனுக்கு விருப்பத்தைக் கொடுத்தது போலக் குற்ற

மற்ற நெஞ்சுடையார் கூறும் வன்சொற்கள் இன்சொற்களாகும் என்பதும், குற்றம் பொருந்திய மனத்தோடு மன்மதனிட்ட மலரம்பு இறைவனுக்கு வெறுப்பையளித்தது போலப் பகைவர்கள் கூறும் இன்சொற்கள் வன்சொற்களாகும் என்பதும் இச்செய்யுளின் கருத்தாகும். இனி நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கூறியுள்ளவற்றைக் காண்போம்.

"வன்சொல் என்பது உண்மைக்கு மாறாகவும், அன்பின்றியும் செற்றம்பற்றிப் பிறரை இகழ்ந்துரைக்கு மிடத்துக்குற்ற மாகுமன்றி எவ்வழியும் குற்றமாகாது. பிறர் தீமைகளை மென்சொற்களால் மாற்ற இயலா விடத்துப் பழித்தலும், இடித்துரைத்தலும் இன்றியமை யாதனவே.

> 'புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
> இகழ்வாரை நோவ தெவன்

என்றார் திருவள்ளுவர். மருத்துவன் கைப்பும் காரமுமுடைய மருந்துகளால் நோய் தீர்க்குமாறு போலச்சான்றோர்கள் வெஞ்சொற் களால் பிறருடைய குற்றங்களைப் போக்குவர். ஆசிரியர் தொல்காப்பி யனார் இக்கருத்துடன் இதற்கு வாயுறை வாழ்த்து என்று பெயர்கூறி

> "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
> வேம்பும் கடுவும் போல வெய்தாத்
> தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்று
> ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"

என அதற்கு இலக்கணம் இயம்பினார். திருக்குறட்பாக்களிற் பல இவ்வியல்பினை உடையனவாதலின் அந்நூலுக்கே வாயுறை வாழ்த்து எனவும் ஒரு பெயருண்டு என்று பிற்காலப் புலவர்களின் சுடுசொல் லாட்சி என்னும் கட்டுரையில் கூறியுள்ளார்.

ஆக இதுகாறும் கூறியவற்றால் இன்சொல் வன்சொல் என்பவை கூறு வோரியல்பிற்கேற்பப் பொருள் வேறுபடுபவன வென்பதும் சான் றோர் பிறரை நன்னெறிப் படுத்தற்குக் கூறும் சொற்கள் ஒலியால் இன் சொற்களாயினும் வன்சொற்களாயினும் பொருளால் இன்சொற்க ளாகும் என்பதும், தீயோர் கூறும் சொற்கள் ஒலியால் இனியவா யிருப்பினும் பொருளாலும், பயனாலும் தீமை தருவனவாயிருத்தலால் வன்சொற்களாகும் என்பதும், இச்சொற்களைக் கூறுவோரின் வாயிலாக இன்சொற்கள் என்றும் வன்சொற்களென்றும் அறிந்து கொள்ள முடியுமேயன்றி, வெறும் சொற்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடியாதென்பதும் இனிது விளங்கும்.

> எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு.

நலம்

தஞ்சை இலக்கியக் கழகச் சார்பில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப்பெரு மன்றத்தில்

திரு. கவிஞர் முடியரசன் தலைமையில் 'தமிழினம் வாழ'

என்ற தலைப்பில் 7—2—60 ஞாயிறன்று நிகழ்ந்த கவியரங்கில்

அழ. சிதம்பரம், எம். ஏ.,

(பொருளியல் ஆராய்ச்சி மாணவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

அவர்கள் பாடிய பாடல்கள்.

(1) நீர்வளமும் நிலவளமும் சேர்ந்த நாடு!
நீதியுடன் முடிமன்னர் ஆண்ட நாடு!
பார்புகழப் பெருமையுடன் திகழ்ந்த நாடு!
பலரறிய அடிமைஎன உழலும் நாடு!
கூரறிவு படைத்தவர்கள் வாழ்ந்த நாடு!
குறைமதியோர் சிலராலே வீழ்ந்த நாடு!
சீர்பெருகத் தமிழரினம் வாழ வேண்டில்
திருநாடு பழம்பெருமை அடைய வேண்டும்!

(2) கண்ணான மொழிதன்னை உயிரின் மேலாய்க்
காத்திட்டார் முடிமன்னர்! ஆனால் இன்றோ
என்னமிட்டு மொழிசிதைக்கும் முயற்சி தன்னில்
இறங்கிவிட்டார் ஆளுகின்ற மேலி டத்தார்!
அன்னைமொழி தனைமறந்தான் வாழ்ந்த தில்லை!
அவனிதரும் பாடமிது! தமிழன் வாழத்
தன்னுரிமை அரசோச்சும் அடிமை யில்லாத்
தமிழ்நாடு மன்பதையில் அமைதல் வேண்டும்!

(3) கல்வியெனும் அறிவொளியால், உள்ளந் தன்னில்
கவிந்துள்ள அறியாமை அகல வேண்டும்!
பல்கலையும் நந்தமிழில் இருக்க வேண்டும்!
பயில்கின்ற மொழியாக அமைதல் வேண்டும்!
செல்லரித்த கொள்கையெலாம் மடிய வேண்டும்!
செயலாற்றும் மனப்பாங்கு மலர வேண்டும்!
நல்லதொரு திட்டமுடன் உழைத்தோ மானால்
நலம்சேரும்! நாடுயரும்! இனமும் வாழும்!

(4) வாழ்கின்ற செலவுயரா வண்ணம் மக்கள்
வாழ்கின்ற தரமுயர வேண்டும்; நாட்டில்
ஏழைபணக் காரனெனும் நிலைமை மாறி
எல்லோரும் சமமென்னும் பொதுமை வேண்டும்!
ஊழியத்திற் கேற்றபடி வருவாய் ஈந்திங்(கு)
உள்ளவர்கள் எல்லோர்க்கும் வேலை தந்து
சூழ்ந்துள்ள வறுமையெனும் இருளை நீக்கும்
சுடரொளியாய்த் திட்டத்தை வகுக்க வேண்டும்.

(5) கரும்பாலை, பஞ்சாலை கனி வளத்தைக்
கடைந்தெடுத்தே எந்திரங்கள் வடித்தெடுக்கும்
இரும்பாலை, அலுமினியம் மற்று முள்ள
எண்ணிறந்த ஆலையெல்லாம் கக்கு கின்ற
கரும்புகைதான் விண்சென்று மேகப் பெண்ணைக்
கலந்துறவு கொள்ளவவள் கருவுயிர்த்துத்
தருகின்ற மழையென்னும் குழவி தன்னைத்
தானேந்திப் பயிர்விளைக்கும் நாடு காண்போம்!

(6) பொன்னிறத்தில் நெற்பயிர்கள் தலைவணங்கப்
பூவிதழைத் தருவினங்கள் உதிர்த்து வாழ்த்தக்
கன்னலுடன் தென்னையினம் தலைநிமிர்ந்து
ககனத்தில் தன்பெருமை முரசு கொட்ட
வண்ணமுடன் வளைந்தோடும் நதிகள் உள்ள
வளநாடு தமிழ்நாடு! எனினும் இங்கே
உண்ணவுண வில்லாது வாடு வாரும்
உளரென்னும் நிலைகாண வெட்கம் அன்றோ!

(7) காய்கின்ற எரிகதிரோன் நடனம் ஆடக்
கருகுகின்ற செடிகொடிகள் நாற்றம் வீசப்
பேய்கூட வாழ்வதற்கே அஞ்சு கின்ற
பெரும்பரப்பாம் இராசசுத்தான் பாலை இந்நாள்
ஆய்ந்தெடுத்த திட்டத்தால் பஞ்சாப் நீரை
அணையிட்டுக் கொண்டுவந்து வளமை சேர்த்துக்
காய்கனிகள் குலுங்குகின்ற சோலை யாக்கும்
கனவெல்லாம் நனவாகும் நாளில் இங்கே

(8) வளமிருக்கும் பொன்விளேக்கும் கழனி யெல்லாம்!
வரண்டிருக்கும் நீரில்லா நிலமை ஓர்பால்!
குளமிருக்கும் கண்களொடு! வானே நோக்கிக்
குவிந்திருக்கும் கைகாணும்! கொடுமை இங்கே!
விளேவதற்கும் நீர்கொடுத்துக் கடலில் வீணே
வீழுகின்ற ஆந்திரத்து நதிகள் நீரை
வளேத்தெடுக்கும் பெருந்திட்டம் செய்தால் என்ன?
வறுத்தெடுக்கும் அரசினரோ கைவிரிப்பார்!

(9) வறுமைநிலே நமையகலத் திட்டம் கண்டும்
வகையோடு நிறைவேற்றச் செல்வம் வேண்டும்!
இறக்குமதித் தேவைகளேக் குறைத்து விட்டே
ஏற்றுமதி வாணிபத்தைப் பெருக்க வேண்டும்;
சிறிதேனும் அவரவர்தம் நிலேமைக் கேற்பச்
சேமிப்புச் செய்திடுவோம்; நம்செல் வத்தைப்
பிறநாட்டான் கொள்ளேயிட வாளா நின்று
பின்னவனேக் கெஞ்சுகின்ற அவலம் வேண்டாம்.

(10) முக்கடல்கள் அலேயெறிந்து போட்டி போட்டு
முத்தமிட எண்ணுகின்ற குமரி தன்னேச்
சுக்கான்கள் செலுத்துகின்ற நாவாய்க் கூட்டம்
சுற்றிவரத் தமிழகத்துத் துறைமுகங்கள்
அக்கரையின் வாணிபத்தால் சுங்கம் ஈட்ட
அளவிறந்த பொருள்சேரும் நாளெந் நாளோ?
செக்கிழுத்த சிதம்பரனர் கனவு இங்கே
செயலானல் தமிழ்நாட்டில் வளம் கொழிக்கும்!

(11) மலர்நீட்டம் அதுவளரும் வெள்ளம் போன்றே
மன்பதையில் நாடுயர வேண்டின் மக்கள்
உளமுயர வேண்டுமன்றே! தன்ன லத்தை
ஒதுக்கிவிட்டுக் கூட்டுறவை வளர்த்தோ மென்னில்
வளமையிடை வறுமையென வாழும் காட்சி
மறைந்துவிடும் நாடெங்கும் மகிழ்ச்சி பொங்கும்!
உலகத்தில் நம்புகழ்தான் நிலேத்து நிற்கும்;
உழைத்திடுவோம்! பலன்காண்போம்! ஒன்று சேர்வோம்!

மதிப்புரை :

பண்டார சாத்திரம்.

தசகாரியங்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் நூற்றுமுப்பத்திரண்டாவது வெளியீடாகத் 'தசகாரியங்கள்' என்ற புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீ அம்பலவாண தேசிகர், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசிகர், ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் என்னும் மூவர் அருளிச்செய்த தசகாரியம் என்னும் மூன்று சாத்திர நூல்கள் இதில் உள்ளன.

தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துச் செயல்களைக் கூறுவதால் தசகாரியம் என்று இந்நூல்கள் பெயர் பெற்றன. இம்மூன்று நூல்களுள் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளிய தசகாரியம் மிகவும் அருமையான நூலாகும்.

இவற்றுள் ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அருளிய தசகாரிய நூலுக்குப் பதினேழு பாடல்வரை பழைய உரை கிடைத்தமையால் அவற்றை விட்டு ஏனைய பாடல்களுக்கும், மற்ற இரண்டு தசகாரிய நூல்களுக்கும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகரவர்கள் உரையெழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதிய உரை பல இடங்களில் நன்கு அமைந்துள்ளது. சில இடங்களில் இன்னும் உண்மைப் பொருள் ஆராய்ந்து துணியவேண்டியதாய் உள்ளது.

ஸ்ரீ அம்பலவாண தேசிகர் தசகாரியத்துள் 'தெரிந்த புண்ணியமும் சற்றுந் தெரிந்திடாதனவுமொத்து' (10) 'தேசுறு மனுவு மீசனருளுமவ் வாறதாக, வேசறு முயிரதாக வியைந்துள்ம் புகுந்து நிற்கும், (11) என்னும் பகுதிகளின் உரையும் (இருட்டதால்) (22) என்னும் பாட்டின் உரையும் இன்னும் வெவ்வேறு சில இடங்களின் உரையும் சைவ உலகம் ஆராய்ந்து பார்த்து உண்மைப் பொருள் காண முயலவேண்டும்.

* திருவாசகத் தேன்.

சோ. ந. கந்தசாமி, B.A., Hons.. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தேன் இனிக்கும்; இன்பம் பயக்கும்; அருமருந்தாகி நோய்நீக்கும். திருவாசகத்தேன் இனிக்கும்; இன்பம் பயக்கும்; அறியாமை நோய்க்கும் பிறவிப் பிணிக்கும் அருமருந்தாகி நன்றின்பால் உய்க்கும். தேன் தூய மலரிற் பிறக்கும்; இத்திருவாசகத் தேன் தூய மலர் வாயிற் பிறந்தது. மலர்த்தேன் வாய்ப்பொறி ஒன்றற்கே சுவை பயப்பது; வாசகத் தேன் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாச் சுவை ஊட்டவல்லது. தேனைப் பெறுமாறென்னை? பல மலர்களிற் பொழுதறிந்து புக்கு ஞிமிறினங்கள் தேன் துளிகளைச் சுவைக்குமாறு போல, திருவாசகத்துப் பாக்களில் தோழர்கள் தோய்ந்து துய்க்கு மாற்றைக் காண்கின்றோம். பல மலர்களிலும் ததும்பிக்கிடக்கும் தேன் துளிகளைக் கூட்டிக் கொணர்ந்து இருலில் அமைத்துத் தமக்கும், பிறர்க்கும் பயன் நல்கும் சுரும்பினங்கள். திருவாசகம் தேனிருல் என்க. தமக்கும் பிறர்க்கும் உறுதுணையாமாறு பல்லாற்ருற் கண்டறிந்த தேன் போன்ற கருத்துக்கள் துறுமிய பாக்களால் இவ்விருலை யாத்தார் மாணிக்கவாசகர்.

அடிகளாரின் அருள்பழுத்த குரலும், அன்பு கனிந்த மொழி அழகும், ஆற்றெழுக்கான நடைப்பொலிவும், கவினிய கருத்துப் பொதுளிய விமாண்பும் கற்போர்க்குக் கரையிலா மகிழ்வும், வரையிலா உணர்வும் வழங்கும் கருவூலங்களாகும்.

திருவாசகமென்னும் தெவிட்டாத தேனை அளித்த மாணிக்க வாசகப் பெருந்தகை எக்காலத்தினர். அவர்தம் பெற்றோர் யாவர், அறவியாய் எத்துணை யாண்டுகள் கழித்துப் பின்றை துறவியானர் என்பன போன்ற கடாக்களுக்கு, எல்லோர்க்கும் உடன்பாடாமாறு விடையிறுத்தார் இலராவர். "அற்றை நக்கீரனும், பிற்றைச் சிவஞான முனிவரும்" ஒன்று சேர்ந்து ஒருருவெடுத்தாலன்ன ஒண்டமிழ்த் தாயின் ஒருவா அன்பிற்கு உரிமை கெழுமிய மறைமலை அடிகளார் தாம் வாழ்ந்த காலத்துக் கிடைத்த கருவிகளின் துணைக் கொண்டு மணிவாசகப் பெருமான் கி. பி. ௩-ஆம் நூற்ருண்டினர் என்று நிறுவிப் போந்தனர். வேறுசில ஆய்வுரைகளில் மாணிக்க வாசகர் கி. பி. முதல் நூற்ருண்டிலிருந்து பதினன்காம் நூற்ருண்டு வரைக் காட்சி நல்கிச் செல்கின்ருர். தமிழ் வரலாறு யாத்த தஞ்சை சீனிவாசப் பிள்ளையவர்கள் இவரது காலம் கி. பி. ௯-ஆம் நூற்ருண்டென முடிவு கூர்ந்துள்ளனர். திருவாளர் வையாபுரிப் பிள்ளையவர்களின் கருத்தும் இம்முடிவிற்கு உடன்படுகின்றது. இவர்தம் ஆய்வுரைகளை யெல்லாம் ஆழ்ந்து ஆய்ந்து பயில்வார்க்கு மாணிக்கவாசகர் கி. பி. ௩-ஆம் நூற்ருண்டினராகக் கொள்ளற்குச் சற்று ஏலாதேனும், மூவர் முதலிகளுக்கும் முற்பட்டவரே என்பது எளிதிற் போதரும்.

---

* இக்கட்டுரை 15—10—1955-ல் விரிவுரையாளர் கா. மீனட்சிசுந்தரனர், எம். ஏ., அவர்கள் தலைமையில் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் என்னல் படிக்கப்பெற்றது.

இனி, மாணிக்கவாசகர் "வாதவூரர்" என்றழைக்கப்பெறலானும், "வாதவூரினில் வந்தினிதருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" என்று அடிகளே இயம்புதலானும் இவர்கள் திருவாதவூரிற் றோன்றிய செம்மல் என்பது வெள்ளிடைமலை. அடிகளார் முதுமை கதுவா முன்னமே தமது முப்பத்திரண்டாம் அகவையிற் சிவனடி நீழல் எய்திய தொழும்பர் என்பது பழம்பாட்டொன்றால் புலனாகின்றது. இவர்தம் வரலாறு பிற்காலத்தெழுந்த புராணங்களிற் பற்பலவாற்றாற் பகரப்படுதலான், ஈண்டைக்கு அவையெல்லாம் துருவி நோக்கில் விரியுமென விடுத்து, இவர் தம்நூல் எக்காரணம் பற்றி எழுந்ததாகக் கொள்ளப்படும் என்பதை யாய்ந்து அதன் பின்றை இவர்தம் பனுவற்காவில் உலாவி இன்பந்துய்ப்போம்.

"எட்டாந் திருமுறையாகிய இது, ஐம்புல இன்பமும் ஆரத் துய்க்கும் அரசவாழ்வில், அமைச்சர் பதவியிற் சிக்கி, பிறந்ததன் பயனைச் சிறிது மறந்திருந்த ஆன்மாவாகிய வாதவூரடிகட்கு இறைவன், குருவாக எழுந்தருளி உண்மை ஞானத்தை உணர்த்த, அதன் விளைவாக எழுந்த அனுபவ ஞானத்திருநூல்" என்று இந்நூலெழக் காரணங் கூறுநரும் உளர். இவர்தம் கூற்று சமயக் கண் கொண்டு நோக்குநர்க்குத் தகவுடைத் தாமென்க. ஆயின், இலக்கியக் கண்களைத் திறந்து இந்நூலை நோக்கின் பிறிதொரு முடிபிற்கே வருதல் வேண்டும். இம்முடிவிற்கு வருமுன், இந்நூல் எச்சூழ்நிலையில் எழுந்ததென்பதும், இந்நூற்குப் பிற்றைநாட்சூழல் யாது என்பதும் காண்டல் வேண்டற்பாற்று.

சமயம் என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களிற் பயிலப் பெறுமையான் அற்றைத் தமிழகத்தில் சமயக்கருத்துக்கள் நிலவிற்றில என்பார் கூற்று செல்லாது. என்னை ? *கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டிற் றோன்றிய மணிமேகலையில் சமயக்கணக்கர் தம் திறங் கேட்டகாதை என்றொரு நூற்பகுதி ஒளிரக் காண்டுமாகலின் என்க. அதனுட் சிவநெறிக் கொள்கைகளைச் செப்பும் சீரியோரும், புறசமயங்களைப் பற்றிப் புகலும் அறநெறியாளரும் வயங்கக் காண்டு மன்றோ ? ஆகலான் அற்றை ஞான்றும் சைவமுடன் பிறசமயங் களும் தழைத்திலங்கின என்பது பெற்றாம். இனி 'சமயம்' வட சொல்லாகக் கருதப்படுதலான் சமயக் கொள்கைகளும் வடவர்க் கன்றோ உரியவை என்று சிலர் ஐயங்கிளத்தலாம். வழங்கும் சொல் வடமொழிக்கே உரியதாகலான் அச்சொல்லாற் குறிக்கப்பெறும் கருத்துக்களும் வடவர்க்கே உரியவை என்பார் கூற்றும் மேவாது. என்னை ? ஆங்கில நூல்களைக் கற்றுத் துறைபோய தமிழனொருவன் தனதுள்ளத்திற் பிறந்த தமிழ்க் கொள்கைகளை அப்பிறமொழியிற் கூறுதலான் அவையெல்லாம் ஆங்கிலக் கொள்கைகளே என்று இயம்புநரும் உளரோ ?

(தொடரும்)

---

* இக்கட்டுரை எழுதிய காலத்தில் மணிமேகலையின் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்பது என் கருத்து. விரிவை "மணிமேகலையின் காலம்" என்ற கட்டுரையில் விளக்கியுள்ளேன்.